# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

'கொங்கு மாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர் பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்லா கோவிந்தசாமி
16. சக்தி மசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர் க.ரா.பழனிசாமி

**2008 ஆம் ஆண்டு**

21. ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

**2009 ஆம் ஆண்டு**

24. பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

**2011 ஆம் ஆண்டு**

27. அட்லஸ் எம்.நாச்சிமுத்து
28. கே.ஏ.செங்கோட்டுவேல்

**2012 ஆம் ஆண்டு**

29. கலைமாமணி சிவகுமார்

**2013 ஆம் ஆண்டு**

30. நல்லா ஜி.பழனிசாமி

**“கொங்குமாமேதை” விருது பெற்றவர்**

அருட்செல்வர் டாக்டர். நா.மகாலிங்கம்

(2006 ஆம் ஆண்டு)

❖❖❖❖

# கொங்கு மாமணி



## இராசி சீட்ஸ் டாக்டர் எம்.இராமசாமி

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் என்ற ஒரு சிற்றூர் இன்று உலக மரபணு வரைபடத்தில் முக்கிய இடம் பிடிக்கக் காரணம், அங்கு அமைந்துள்ள "**இராசி சீட்ஸ்**" என்ற விதை உற்பத்தி நிறுவனம். அத்தகைய பெருமை மிக்க நிறுவனத்திற்கு வித்திட்டவர் டாக்டர் மு.இராமசாமி அவர்கள். இவர் 1944 இல் இராசிபுரத்தில் ஒரு சிறு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, 1966 இல் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப் படிப்பை முடித்தார். சிறிது காலம் வேளாண் துறையில் பணியாற்றிய இவர் சுய தொழில் தொடங்கும் முனைப்பில் 1973 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தைத் தொடங்கினார். அவரது அயராத உழைப்பாலும், அவரது மனைவி மற்றும் குடும்பத்தாரின் முழு ஈடுபாட்டாலும் இன்று இந்நிறுவனம் அகில இந்திய அளவில் 700 க்கும் மேற்பட்ட அலுவலர்கள் நேரடியாகவும், பல லட்சம் விவசாயிகள் மறைமுகமாகவும் பயன்பெற்று வருகிறார்கள்.

தற்போது இராசி நிறுவனத்தின் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பண்ணைகள் ஆத்தூர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி மட்டுமல்லாமல் டெல்லி, ஹைதராபாத், பெங்களூரிலும் அமைக்கப்பட்டு நாடு முழுவதும் விதை விநியோகம் செய்யும் வசதிகள் உள்ளன.

RASI Hy-Veg. என்ற பெயரில் காய்கறி விதைகளைப் பெருமளவு மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கி உள்ளது. அதற்குண்டான ஆராய்ச்சிக் கூடங்கள் ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள குல்லு, டெல்லி, பெங்களூர் போன்ற இடங்களிலும் இயங்கி வருகின்றன.

Rasi Seeds குழுமத்தில் ராசி டெக்ஸ் என்ற 35 ஆயிரம் Spindle கொண்ட நூற்பாலையும், Rasi g Energy என்ற 15 MW கொண்ட காற்றாலையும் அடங்கும். அது மட்டுமன்றி, பன்னாட்டு நிறுவனமான "**மான்சாண்டோவின்**" துணை உரிமம் பெற்ற முதல் இந்திய நிறுவனம் "இராசியே" ஆகும். BT டெக்னாலஜியில் இங்கு உற்பத்தியான பருத்தி விதைகள் விவசாயிகளின் வாழ்வில் நாடெங்கும் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது அனைவரும் அறிந்ததே. மேலும், இஸ்ரேலில் உள்ள ஒரு மரபணு நிறுவனமான "Evogene" என்ற நிறுவனத்துடன் நெல் வளர்ச்சியில் புதிய தொழில் நுட்பங்களை உபயோகித்து அதிக மகசூல் பெற முனைந்துள்ளது.

விதைத்தொழில் நுட்பத்தில் ராசி சீட்ஸ் இந்தியாவில் உயர்ந்த ஓர் இலக்கினை அடைந்ததற்குக் காரணம் டாக்டர் மு.இராமசாமி அவர்களின் நேர்மையும், தொழில் முறையில்

கடைபிடித்த (Work Ethics) நேர்மையான செயல்பாடுகளும், ஒவ்வொரு நிலையிலும் விவசாயச் சமுதாயத்திற்குப் பயன் தரும் வகையாகத் தொழில் முறை அமைய வேண்டும் என்ற அவரது உயர்ந்த நோக்கமுமே ஆகும். ராசி சீட்ஸ் சேலம், விழுப்புரம் மாவட்ட சிறுவிவசாயிகள் பெரும்பான்மையினருக்கு இதுவரை சுமார் 1500 கோடி ரூபாய் மதிப்பிற்கான வருமானம் ஈட்டித்தந்துள்ளது. அதில் பெரும்பான்மையினர் நமது கொங்குச் சமுதாயத்தினரே ஆவர். மேலும் இவ்விவசாயிகள் மூலம் வருடம் சுமார் 70000 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படுகிறது.

ராசி விதைகள் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ஈரோடு பகுதிகளில் பெருவாரியாகப் பயிரிடும் மரவள்ளிக் கிழங்கில் "**RASI–20**" என்ற புதிய ரகத்தை வெளியிட்டுள்ளது. இது Virus தாக்குதலைத் தாங்கி அதிக மகசூல் தரும் ரகமாகும். இதனால் விவசாயிகளுக்கு, மாவுச்சத்து மிகுந்திருப்பதால் கிழங்கு அரவை நிறுவனங்களுக்கும் பயன் தரும் வகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க டாக்டர் மு.இராமசாமி அவர்களின் ஆர்வத்தினால் லாப நோக்கமின்றி உருவானது.

வெற்றியின் பலன் பகிர்ந்து கொள்ளபட வேண்டிய ஒன்று என்ற டாக்டர் மு.இராமசாமி அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையில் உருவானதுதான் "முத்துக்கவுண்டர் முத்தாயம்மாள் அறக்கட்டளை" ஆகும். அவரது சமுதாய அக்கறைக்கு எடுத்துக்காட்டு இந்த அறக்கட்டளையும், ராசி சீட்ஸ்ம் இணைந்து நடத்தும் "இலவசக் கண் சிகிச்சை முகாம்" ஆகும். கடந்த 16 வருடங்களாக "மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையுடன்" இணைந்து சுமார் 27500 க்கும் மேற்பட்ட ஏழை எளியவர்களுக்கும், முதியவர்களுக்கும் கண் சிகிச்சை அளித்து உதவியிருக்கிறது. மேலும், இந்நிறுவனம் பொருளாதார ரீதியாகப் பின் தங்கிய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை அளித்து உயர் கல்வி தொடர உதவி வருகிறது.

நிலையான நிறுவனங்கள் உருவாகும்போதுதான் ஒரு சமூகத்தின் அடையாளம் என்பது வெளிப்படும். எந்தத் திட்டமும் தகுதிமிக்க தலைமை அமைந்தால் மட்டுமே விரைந்து நிறைவேறும். அந்த விதத்தில் கொங்குச் சமுதாயத்தின் நீண்ட நாள் பெரும் கனவு "வேளாண்செம்மல்" டாக்டர் மு.இராமசாமி அவர்களை முன்னிறுத்தி இப்போது நனவாகி வருகிறது. சேலம்–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போவோர், வருவோர்க்கெல்லாம் கொங்குச் சமூகத்தின் பிரமாண்டத்தையும், சாதனையையும் இரவு பகலாய் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும் வகையில், ஒரு திருமணக் கூடத்தை எழுப்பும் முயற்சியில் மூல முதல் வேராக நின்றவர் டாக்டர் மு.இராமசாமி அவர்கள்தான். தமிழகத்தின் பல பகுதிகளில் கொங்குச் சமூகத்தின் பெயர் சொல்லும் இது போன்ற கட்டுமானங்கள் இருந்தபோதிலும் அவையெல்லாம் ஒரு சிலர் மட்டும் இணைந்து முதலீடு செய்தவர்களாகவே காணப்படுகின்றன. ஆனால் 1500 க்கும் மேற்பட்ட குடும்பங்களை ஒன்றிணைத்து அவர்கள் மூலமாக 7000க்கும் மேற்பட்ட பங்குளை உருவாக்கி இம்மகத்தான செயலைச் செய்தது அளப்பரிய சாதனை ஆகும். பொருளாதார ரீதியில் இம்முயற்சி தரப்போகும் லாபத்தை விட, சமுதாயத்தை ஒன்றிணைக்கும் முயற்சியில் இவர் சாதித்துள்ள சாதனை காலத்தில் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

விதைத்தொழில் துறையில் டாக்டர் மு.இராமசாமி அவர்கள் தேசிய விதை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவராகவும், பல்வேறு முக்கியக் கூட்டமைப்புகளில்

நிர்வாகப் பதவிகளை வகிப்பவராகவும் உள்ளார். விதைத் தொழில் துறையில் நேர்மையான தொழில் முறையில் உயர்ந்த நிலையை அடைந்த டாக்டர் மு.இராமசாமி அவர்களுக்கு கௌரவம் சேர்த்த சில விருதுகள் இதோ:

- 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் வழங்கிய “வேளாண் செம்மல்” விருது
- 2005 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான அமைச்சகம் இந்தியாவில் Bt பருத்தியை அபிவிருத்தி அடைய செய்ததற்காகத் தொழில் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளுக்கான DSIR தேசிய விருது.
- 2006 ஆம் ஆண்டு பயோ ஸ்பெக்டரம் வழங்கிய அந்த ஆண்டுக்கான “சிறந்த நபர் விருது”.
- 2007 ஆம் ஆண்டு பயோ ஸ்பெக்டரம் வழங்கிய “பயோ அக்ரி கம்பெனி ஆப் தி இயர் 2007 விருது”.
- 2008 ஆம் ஆண்டு கர்நாடகா அரசாங்கம் வழங்கிய “பயோ எக்ஸலன்ஸ் 2008” விருது.
- பழம்பெரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் விவசாய மேம்பாட்டிற்கான அவரது பங்களிப்பினைப் பாராட்டி 2008ஆம் ஆண்டு “கௌரவ டாக்டர் பட்டம்” வழங்கியது.
- 2009 ஆம் ஆண்டு அரியானா பருத்தி ஆராய்ச்சி மேம்பாட்டு சங்கம் “வாழ்நாள் சாதனையாளர்” விருதினை வழங்கியது.

அதிக நீளமான இழை கொண்ட Bt பருத்தியை இந்தியாவில் உருவாக்கி பிரபலபடுத்தியதைப் பாராட்டி பருத்திக்கான அகில இந்திய பருத்தி மேம்பாட்டுச் சங்கம் 2011 –ல் டாக்டர் இராமசாமிக்கு கௌரவ பட்டம் அளித்தது.

ராசி சீட்ஸ் நிறுவனம் இந்திய விவசாயிகளோடு ஒரு விசேஷப் பிணைப்புக் கொண்டுள்ளது. இந்திய விவசாயிகளுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற டாக்டர் மு.இராமசாமி அவர்களின் உயர்ந்த நோக்கம் நிச்சயம் இந்தப் பிணைப்பை மேலும் வலுப்படுத்தும்.

டாக்டர் மு.இராமசாமி அவர்களின் சாதனைகளுக்கும் வெற்றிகளுக்கும் பெருந்துணையாய் விளங்குபவர்கள் அவருடைய மனைவி திருமதி சிவகாமி அவர்களும், மகன், மருமகள் மற்றும் குடும்பத்தார் அனைவரும் ஆவர். திரு இராமசாமி அவர்கள் அயரா உழைப்பு, தொழில் நேர்மை, எளிமை, விருந்தோம்பல், கொடையுள்ளம் போன்ற அரும் பண்புகளுக்குச் சொந்தக்காராரக விளங்குகிறார். பெரும் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி தமிழ் நாட்டிற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ள டாக்டர் மு.இராமசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு மாமணி’ விருது வழங்கிப் பெருமை கொள்கிறது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## 2013 ஆம் ஆண்டு "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி சாரதாமணி சின்னசாமி | சென்னை | சிறந்த சமுதாயப் பணி |
| 2. | ஸ்ரீ சங்கரா வித்யாசாலா போர்ட் | கொடுமுடி | சிறந்த கல்விப் பணி |
| 3. | திரு.எம்.வெள்ளிங்கிரி | கரூர் | சிறந்த பொதுப் பணி |
| 4 | டாக்டர் எல்.பி.தங்கவேலு | கோவை | சிறந்த மருத்துவப் பணி |
| 5 | திரு.ஆர்.பெரியசாமி(PSK) | நாமக்கல் | கட்டுமானத் தொழில்துறை –யில் சாதனை. |
| 6 | டாக்டர் கே.குமாரசாமி | கோவை | சிறந்த ஆசிரியர் பணி |
| 7 | டாக்டர் சந்திரலேகா வேலுச்சாமி | பழனி | சிறந்த மருத்துவப் பணி |
| 8 | திரு.மு.இரவி | சென்னிமலை | சிறந்த கிராமப் பணி |
| 9 | க.சந்திரமோகன் | நாமக்கல் | சரக்குப் போக்குவரத்துத் தொழிலில் சாதனை |
| 10 | பி.சரவணன்(IFS) | சேலம் | ஐ.எஃப்.எஸ்.தேர்வு பெற்றமை |
| 11 | திரு.டி.பூபாலன்(IRS) | பொள்ளாச்சி | ஐ.ஆர்.எஸ்.தேர்வு பெற்றமை |

## பிற சாதனையாளர்கள் (2013 ஆம் ஆண்டு)

| | | |
|---|---|---|
| 1. | திரு.சின்னயா சுப்பிரமணியம் | வெளிநாட்டுக் கொங்கு சாதனையாளர் |
| 2. | திரு.எஸ்.என்.பாலசுப்பிரமணியம் | கொங்கு வேளாண் சாதனையாளர் |
| 3. | திரு.புவனேஷ் & திரு.தினேஷ்குமார் | கொங்கு இளம் சாதனையாளர்கள் |

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் P.V.ஞானசேகரன்

நாமக்கல் மாவட்டம், பாச்சல் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் கிராம முன்சீப் திரு. P.வரதப்பக் கவுண்டர் – திருமதி வேலம்மாள் தம்பதியருக்கு **1951** ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், டாக்டர் P.V.ஞானசேகரன்.

பள்ளிப்படிப்பைப் பாச்சல் அரசு உயர்நிலைப்பள்ளியில் முடித்தார். பள்ளி இறுதித் தேர்வில் நாமக்கல் மாவட்டத்தில் முதல் இடம் பெற்றுப் பதக்கம் பெற்றார். P.U.C. படிப்பை, திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியிலும், MBBS படிப்பைக் கோவை அரசு மருத்துவக் கல்லூரியிலும், DCH படிப்பை சென்னை MMC–யிலும் முடித்தார்.

அரசு மருத்துவராக சுமார் **30** ஆண்டுகள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, **2011** ஆம் ஆண்டுப் பணி ஓய்வுபெற்றார். தற்சமயம் ‘St.Francis Hospital’ என்ற கிருத்துவ சேவை நிறுவனத்தில் கௌரவ மருத்துவராய்ப் பணியாற்றி வருகிறார். கடந்த **35** ஆண்டுகாளக, இராசிபுரம் நகரைச் சுற்றியுள்ள நாமகிரிப்பேட்டை, சிங்களாந்தபுரம் போன்ற பல கிராமப்பகுதிகளில் தனது சொந்த மருத்துவமனை மூலமாக, கிராமப்புற மக்களுக்குக் குறைந்த செலவில் மிகச்சிறப்பாக மருத்துவச் சேவை செய்து வருகிறார்.

இவரது சிறந்த மருத்துவப் பணியைப் பாராட்டிப் பல விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. இராசிபுரம் அரசு மருத்துவ மனையின் தலைமை மருத்துவ அலுவலராக அவர் பணியாற்றிய மூன்று ஆண்டுகளில், மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த மருத்துவமனையில், நோயாளிகளின் எண்ணிக்கை, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைத்தரம் ஆகியவற்றை உயர்த்தி, மருத்துவமனையின் சுற்றுப்புறத்தில் பூங்காக்கள், நீரூற்று போன்றவை அமைத்து, சுற்றுப்புறச் சுகாதாரத்தை மேம்படுத்தி நாமக்கல்

மாவட்டத்திலேயே சிறந்த அரசு மருத்துவமனை என்ற பாராட்டையும், மாவட்டத்தின் சிறந்த மருத்துவ அலுவலர் என்ற பாராட்டையும், விருதையும் அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து சுதந்திர தின விழாவில் பெற்றார். பிரச்சனை ஏற்பட்ட காலங்களில் இராசிபுரம் அரசு மருத்துவ மனையைத் திறம்பட நிர்வாகம் செய்தவர் எனவும் பாராட்டப்பட்டவர்.

இராசிபுரம் ரோட்டரி சங்கத்தின் சார்பாக, சிறந்த மருத்துவச் சேவைக்கான விருதை 2009 ஆம் ஆண்டு மருத்துவர் தின விழாவில் வழங்கப்பெற்று, கௌரவிக்கப்பட்டார்.

சென்னையில் உள்ள தேசிய ஒருமை கலை, பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக, சிறந்த மருத்துவச் சேவைக்கான விருதை 2010 ஆம் ஆண்டு தியாகராய நகர் ஜெர்மன் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் இவர் பெற்றார்.

சிறந்த மருத்துவச் சேவைக்கான விருது மற்றும் ‘ராஜ கலைஞன்’ என்ற பாராட்டுச் சான்றிதழ் ‘தமிழகப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக 2012 ஆம் ஆண்டு திருச்சி தேவர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் இவருக்கு வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார்.

இவருடைய மனைவி திருமதி ராஜேஸ்வரி இல்லத்தரசியாக விளங்கி, இவருடைய மருத்துவப் பணிகட்கு உதவி புரிந்து வருகிறார். மகன் டாக்டர் G.சுரேஷ்குமார் M.D (Anaes) சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். மருமகள் டாக்டர் திருமதி கலைமணி M.D.(O&G) சென்னையில் தனியார் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராய்ப் பணியாற்றி வருகிறார். இத்தம்பதியரின் மகன் மிதுன் கண்ணா– Dr.ஞானசேகர் அவர்களின் பெயரன்– 1 $^{1}/_{2}$ வயது நிரம்பிய மழலை.

கிராமப்புறத்தில் மிகச் சிறப்பாக மருத்துவப் பணியாற்றிச் சாதனை புரிந்துள்ள டாக்டர் P.V.ஞானசேகரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. உடை அருணாச்சலம்

தாராபுரம் அருகில் உள்ள கவுண்டச்சி புதூர் என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு.உடையப்ப கவுண்டர் – திருமதி பாப்பம்மாள் தம்பதியருக்கு 1948 ஆம் ஆண்டு ஆடிப் பதினெட்டு அன்று மகனாகப் பிறந்தவர், திரு.உடை அருணாசலம்.

பள்ளிப்படிப்பைத் தாராபுரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலும், பொறியியல் டிப்ளமோ படிப்பைப் பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியிலும், B.E. படிப்பைக் கோவை C.I.T பொறியியல் கல்லூரியிலும் முடித்தார்.

தமிழ் ஆர்வமும், சமுதாயப்பற்றும் மிக்கவர். கல்லூரியில் படிக்கும்போதே மாணவர் மன்றச் செயலாளராகவும், தமிழ் மன்றச் செயலாளராகவும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர். பல்வேறு இலக்கிய அமைப்புகளுடனும், தமிழறிஞர்களிடம் தொடர்பு கொண்டு, பல இலக்கியக் கூட்டங்களை நடத்தியுள்ளார்.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பொறியாளராகச் சுமார் 13 ஆண்டுகள் பலரும் பாராட்டும்படி பணியாற்றினார். பின்னர், கொங்கு சாதனையாளர் திரு.செல்லப்பன் அவர்கள் சென்னையில் தொடங்கிய 'NUMERIC - UPS' எனும் நிறுவனத்தில் சுமார் 20 ஆண்டுகள் மிகச்சிறப்பாகப் பணியாற்றினார். நிறுவனத்தின் அபார வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர். தற்போது நியூமெரிக் செல்லப்பன் அவர்களின் சூரிய சக்தி நிறுவனமான 'SELECT ENERGY SYSTEMS LTD'என்ற நிறுவனத்தின் ஆலோசகராகச் செயல்பட்டு வருகிறார்.

கடின உழைப்பு, தொழிலில் திறமை, செயல்திறன், வியத்தகு அடக்கம் ஆகிய பண்புகளின் உறைவிடமாகத் திகழும் திரு.உடை அருணாசலம் தற்போது குடும்பத்துடன் கோவையில் வசித்து வருகிறார். இலக்கியம் மற்றும் ஆன்மிக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, அமைதியான முறையில் தொண்டாற்றி வருகிறார்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர். சங்க வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் சீரிய சேவையாற்றியுள்ளவர். 1990 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை சுமார் 20 ஆண்டுக் காலம் சங்கத்தின் சேவைகளிலும் செயல்பாடுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றியவர். இவர் நான்கு ஆண்டுகள் சங்கத்தின் இணைச் செயலாளராகவும், ஆறு ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று, அனைவரும் பாராட்டும் வண்ணம் திறம்படச் செயல்பட்டார்.

சங்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகளில் கலந்துகொண்டு மிகச் சிறப்பான முறையில் செயலாற்றினார். நிதி வசூலிப்பு நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள், குடும்ப விழா, குழந்தைகள் விழா, விளையாட்டு விழா ஆகியவற்றை நடத்துவதில் முக்கியப் பங்காற்றி, அவற்றின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்துள்ள சிறப்புக்குரியவர். சென்னையில் கொங்கு மகளிருக்கென்று தனியாக ஒரு விடுதி கட்டவேண்டும் என்ற யோசனையை முதன்முதலில் தெரிவித்ததோடு, அது செயல்வடிவம் பெறுவதிலும் சிறப்புறத் தன் பங்களிப்பைச் செய்துள்ளார்.

பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் படித்துப் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த முன்னாள் மாணவர்களுக்கு வழங்கப்படும் 'மாணவ ரத்தினம் (Jewel of NPT)' என்ற பெருமை மிகு பட்டம் 2007 ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார். பல்வேறு இலக்கிய அமைப்புகள் இவரைப் பாராட்டி விருதுகள் மற்றும் நினைவுப்பரிசுகள் வழங்கியுள்ளன.

இவரது மனைவி திருமதி ருக்மணி இவரின் சேவைகளுக்கும், வெற்றிகளுக்கும் தூணாக விளங்குபவர். இவருடைய மகன், மகள் இருவரும் அமெரிக்காவில் உள்ளனர்.

தமிழ் இலக்கியப் பணி, ஆன்மிகப்பணி – இவற்றோடு மிகச்சிறந்த வகையில் சமுதாயப் பணி ஆற்றியுள்ளவரும், நமது சங்க வளர்ச்சிக்குப் பலரும் பாராட்டும் வண்ணம் பாடுபட்டவருமான திரு.உடை அருணாச்சலம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## பேராசிரியர் முனைவர் **க.சிவக்குமார்**

சேலம் மாவட்டம், இடைப்பாடி வட்டம், பூலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மோரூர் நல்லபுள்ளியம்மனைக் குலதெய்வமாகக் கொண்ட மற்றும் கண்ணகுல பெரியவர் திரு.கந்தசாமி கவுண்டர் – திருமதி அத்தாயி அம்மாள் தம்பதியரின் மகனாக 1960 ஆம் ஆண்டுப் பிறந்தவர் திரு.க.சிவக்குமார்.

தனது பள்ளிப் படிப்பைப் பூலாம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியிலும், புகுமுக வகுப்பையும் (PUC), இளங்கலை இயற்பியல் (B.Sc.,) பட்டப்படிப்பையும் திருச்சி தூய வளனார் கல்லூரியிலும் முடித்தார். பிறகு, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் புகழ்மிகு கிண்டி பொறியியல் கல்லூரியில் முதுநிலை(M.Sc.,) மற்றும் முனைவர் (Ph.D–1988) பட்டங்களைப் பெற்றார்.

இவருடைய ஆராய்ச்சி ஆர்வமும், கல்வியாற்றலும் இவருக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் 1988ஆம் ஆண்டு விரிவுரையாளர் பதவியில் சேர உறுதுணையாக இருந்தன. தனது கடின உழைப்பாலும், சிறந்த கற்பிக்கும் திறனாலும், ஆராய்ச்சி அறிவினாலும் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, 2003ஆம் ஆண்டுப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். இவர் 2008ஆம் ஆண்டு முதல், அண்ணா பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறைத் தலைவராகப் பணியாற்றினார். இவர் தனது பதவிக் காலத்தின்போது, இயற்பியல் துறை ஆராய்ச்சி மற்றும் நிலை மேம்பாட்டிற்காகச் செயற்கரிய செயல்களைச் செய்துள்ளார். அதன் பிறகு, சிறிது காலம் அண்ணா பல்கலைக் கழகத்தில், இணைத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராய்ப் பணிபுரிந்தார். அண்ணா பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பிற்குப் பிறகு 01–08–2012 முதல் கோவையிலும் பின்னர் மதுரையிலும் மண்டல இயக்குநர் (Regional Director) ஆகப் பணிபுரிந்து வருகிறார்.

இவர் இதுவரை 21 Ph.D. மாணவர்களையும், 32 M.Phil மாணவர்களையும் உருவாக்கியுள்ளார். கிட்டத்தட்ட 160 சர்வதேச ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் ஆராய்ச்சிக்காக மத்திய, மாநில அரசுகளின் உதவித்தொகையாக கிட்டத்தட்ட ரூ.1.4 கோடி பெற்றுச் சிறந்த ஆராய்ச்சிச் சாலையை உருவாக்கி, பல ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகை செய்துள்ளார். இவருடைய ஆராய்ச்சி சர்வதேச தரம் பெற்றது. Crystallography(படிகவியல்) துறையில் முன்னிலை வகிக்கும் ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான இவர், Indian Crystallographic Association

இணைச்செயலாளராக 2010–2013 வரை பதவி வகித்துள்ளார். மேலும் பல அறிவியல் சங்கங்களில் முதுநிலை உறுப்பினராக உள்ளார். இவர் சர்வதேச அளவில் இளம் ஆராய்ச்சியாளர் விருதை 1987 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளார். இவர் மலேசியாவில் உள்ள அறிவியல் பல்கலைக்கழகத்தில் (USM), Penangல், 1994 முதல் 1996 வரை தனது Post Doctorate ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். மேலும் சர்வதேச ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள ஆஸ்திரேலியா, ஜப்பான், தைவான், தாய்லாந்து, சிங்கப்பூர், இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளுக்குச் சென்றுள்ளார். இவரிடம் பயின்ற மாணவர்கள் உலகமெங்கும் பல்வேறு சிறப்புமிகு நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். 2012 ஆம் ஆண்டு சவீதா பல்கலைக் கழகம் இவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கி கௌரவித்தது.

இவர் பொதுச் சேவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் தேசிய நாட்டு நலப்பணித் திட்ட அலுவலராகப் பொறுப்பேற்று, 1997 முதல் 2003 வரை சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று, பல நலப்பணித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். மேலும், ROTARACT CLUB ல் ஆசிரியர் ஆலோசகராக 2003 முதல் 2013 வரை 11 ஆண்டுகள் பணியாற்றி, பல நல்ல நிகழ்ச்சிகளை நடத்தி, அதன் மூலம் பள்ளி மாணவர்களுக்கு மேல்நிலைக் கல்விக்கான வழிகாட்டியாக விளங்கினார். பல அனாதை இல்லங்களுக்கும், பள்ளிகளுக்கும் கட்டடங்களை அமைத்துக் கொடுக்கப் பேருதவி புரிந்துள்ளார். கல்வியை ஊக்குவிக்கும் விதமாக அவர் படித்த பள்ளியில் தனது தந்தையின் நினைவாகப் படிப்பில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கப் பரிசு வழங்கி வருகிறார். அண்ணா பல்கலைக்கழகத்தில் கலந்தாய்வுக்கு வரும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகக் கிட்டத்திட்ட 20 ஆண்டுக் காலமாகத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறார்.

சமுதாயத்தின் மீதும், நம் நாட்டின் கலாச்சாரத்தின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவர் இவர். இவரது மனைவி திருமதி ராதை சிவக்குமார் கடின உழைப்பாளி மற்றும் சமுதாயச் சிந்தனையாளர். இவர்கள் கன்னிவாடியில் சிறுமையுற்று, புலம் பெயர்ந்து சென்ற கண்ணன் குலத்தவரின் பெருமையை மீட்ட மோரூர் சூரியகாங்கேயன் நினைவாக, தங்கள் மூத்த மகனுக்கு சூரியகாங்கேயன் எனப் பெயரிட்டுள்ளனர். அவர் அண்ணா பல்கலைக்கழகத்தில் B.E. (கணினியியல் மற்றும் பொறியியல்) பயின்று, மேற்படிப்பை Georgia Institute of Technology, அட்லாண்டாவில் முடித்து அமெரிக்காவில் Weather Company எனும் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். இவர் மனைவி திருமதி மோகனா. திரு.சிவக்குமார்–திருமதி ராதை தம்பதியரின் இரண்டாவது மகன் சுந்தர் காங்கேயன் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் MBBS பயின்றுள்ளார்.

சமூகப்பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி ஆகியவற்றில் சிறந்து விளங்கி சிறந்த ஆராய்ச்சியாளராக விளங்கும் பேராசிரியர் முனைவர் க.சிவக்குமார் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. S.P.N.சரவணன்

நாமக்கல் மாவட்டம், வள்ளிபுரம் கிராமம் வெண்டுவன் குலத்தைச்சேர்ந்த திரு.நல்லுசாமி கவுண்டர்–திருமதி அங்கம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகனாக 1968 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு SPN.சரவணன்.

தமது துவக்கப் பள்ளிக் கல்வியை, வள்ளிபுரம் R.C.துவக்கப்பள்ளியிலும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக்கல்வியைக் கீரம்பூர் மற்றும் நாமக்கல் நல்லிபாளையத்திலும்(வடக்கு) பயின்றார். வேலூர் கந்தசாமி கவுண்டர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B.Sc படிப்பையும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் M.Sc., B.Ed. மற்றும் M.Phil கல்வியையும் முடித்தார். 1994 இல் படிப்பை முடித்தவுடன் பரமத்தி வேலூர் கொங்கு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் PG Asst. ஆகச் சேர்ந்து 2000 ஆம் ஆண்டுவரை அங்குப் பணிபுரிந்தார்.

1998 ஆம் ஆண்டில் சக ஆசிரிய நண்பர்கள் உறுதுணையோடு முதன்முதலில் நாமக்கல் மாவட்டம் காவேட்டிப்பட்டி கிராமத்தில் SKTG என்ற பெயரில் 11, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு Tuition பயிற்சி மையத்தை ஏற்படுத்தினார். அதுவே 2000 ஆம் ஆண்டில், ஸ்ரீ வெங்கடெஷ்வரா கல்வி அறக்கட்டளை மூலம் குறிஞ்சி மேல்நிலைப் பள்ளியாக அவரால் துவங்கப்பட்டு மாவட்டம் மற்றும் மாநில அளவில் பல சாதனை மாணவ மாணவியர்களை உருவாக்கியது. பலர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தனர். இதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழகத்தையும், நாமக்கல் நகரின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர் அவர்.

பல்வேறு சோதனைகளைத் தாண்டி இந்த வெற்றிச் சாதனைகளை நாமக்கல் நகரில் தொடங்கி வைத்தவர் இவர். நாமக்கல் மாவட்டத்தைக் கல்வி மாவட்டமாக மாற்றியவர்களுள் முக்கியமானவர். அடுத்தடுத்த ஆண்டுகளில் மாநில அளவிலான பல கல்வி சாதனைகளைத் தொடர்ச்சியாகப் புரிந்து வருபவர்.

மேலும், 2007 ஆம் ஆண்டு, நாமக்கல் மாவட்டம் போதுப்பட்டி கிராமத்தில், கிரீன்பார்க் கல்வி அறக்கட்டளை மூலம் கிரீன்பார்க் பள்ளியைத் துவக்கினார். அந்த ஆண்டிலேயே கிரீன்பார்க் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பாடுபட்டு வெற்றி கண்டவர்.

இப்பள்ளியைத் தொடங்கிய ஆண்டிலேயே மாவட்ட அளவிலான சாதனைகளைப் பல மாணவ, மாணவியர்களைப் புரிய வைத்த அவர், அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடர்ந்து மாநில அளவிலான சாதனைகளைப் பெற வைத்துச் சாதனை நாயகராகத் திகழ்கிறார். 2010 ஆம் ஆண்டில் கிரீன்பார்க் இண்டர்நேஷனல் (CBSE)பள்ளியையும், 2013 ஆம் ஆண்டில் கிரீன்பார்க் மகளிர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியையும் துவக்கிப் போதுப்பட்டி கிராமத்தில் கிரீன்பார்க் கல்வி அமைப்புகளை ஒருங்கிணைத்தார். ஈரோடு பெருந்துறை சாலையில் கிரீன் கார்டன் மெட்ரிக் பள்ளியையும், கரூர் அருகில் ஸ்ரீ சரஸ்வதி வித்யா மந்திர் மகளிர் மேல்நிலைப் பள்ளியையும் நிறுவிக் கல்விப் பணியாற்றி வருகிறார். ஏழை மாணவ மாணவியர்களுக்கு உறைவிடம் முதற்கொண்டு இலவசக் கல்விச் சேவையைப் புரிந்து வருகிறார். ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளைச் சிறந்த கல்லூரிகளில் சேர்ந்து பெறுகின்றனர்.

கல்விச் சேவையில் மட்டுமின்றி, பொதுநலச் சேவையிலும் தன்னை ஈடுபத்தி வருகிறார். மரம் நடுதல், இரத்ததான முகாம்கள் ஆகியவற்றைப் பள்ளி குழந்தைகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் மூலமாகவும் NSS, SCOUT போன்ற அமைப்புகள் மூலமும் சிறப்புடன் நடத்தி வருகிறார். நாமக்கல் நகர குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ரூ.50 இலட்சம் மதிப்புடைய 8 ஏக்கர் நிலத்தை நாமக்கல் நகராட்சிக்குத் தானமாக அளித்தார்.

இவரது கல்விச் சேவையைப் பாராட்டி, JCI- Erode Excell அமைப்பு Best Teacher Award – 2012 என்ற விருதை வழங்கி கௌரவித்தது. 12 ஆம் வகுப்பின் முழுநேர வேதியியல் பாட ஆசிரியராக சிறந்த முறையில் மாணவ, மாணவிகளுக்குக் கல்வி கற்பித்து ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் Centum (200 / 200) எடுக்கும் மாணவ, மாணவிகளை உருவாக்கி வருகிறார். இந்த ஆண்டில் மட்டும் 247 மாணவ, மாணவிகளை தமது பாடத்தில் Centum எடுக்கவைத்துத் தமிழகத்தின் வேதியியல் பாடத்தில் Centum எண்ணிக்கையில் ஒரு பகுதியைத் தமதாக்கிக் கொண்ட சிறந்த நல்லாசிரியராகத் திகழ்கிறார்.

திரு. SPN.சரவணன் அவர்களின் மனைவி திருமதி R.S.சுதா தன் கணவருடன் இணைந்து கிரீன்பார்க் கல்வி நிறுவனத்தின் கல்விச் சேவையில் ஓர் அங்கமாகத் திகழ்ந்து, விடுதி மாணவிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்துத் தாய்மையுள்ளத்தோடு சேவை புரிந்து வருகிறார். இத்தம்பதியரின் புதல்வர்கள் செல்வன்.V.S.சச்சின்சூர்யா மற்றும் செல்வன்.V.S.நவீன் சூர்யா முறையே 12 ஆம் வகுப்பிலும், 8 ஆம் வகுப்பிலும் பயின்று வருகின்றனர்.

மிகச் சிறப்பாகக் கல்விப் பணியாற்றிவரும் கல்வியாளர், நல்லாசிரியர், சமூகச் சேவையாளர் திரு. SPN.சரவணன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் கி.க.உமாசங்கர்

திருப்பூர் மாவட்டம், அரண்மனைபுதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.கி.கணேசன் – திருமதி கோவிந்தம்மாள் தம்பதியரின் மகனாக, 1974ஆம் ஆண்டுப் பிறந்தவர் முனைவர் உமாசங்கர். எழுத்து, பேச்சு, கலை என்று பன்முகத்தன்மையிலான செயல்பாடுகள் கொண்டு சிறந்த சமூகப் பணியாற்றிவருபவர் இவர்.

காந்திகிராம் கிராமப் பல்கலைக்கழகத்தில் B.D.A பட்டத்தை 1995 ஆம் ஆண்டும், M.A.பட்டத்தை 1997 ஆம் ஆண்டும், Ph.D(முனைவர்) பட்டத்தை 2007 ஆம் ஆண்டும் பெற்றார். கிராமப் பஞ்சாயத்துகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் செயல்பாடுகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் இவர்.

சுமார் 50 பிராந்திய, தேசிய, சர்வதேச கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார். 29– க்கும் மேற்பட்ட நூல்களையும், 80க்கும் மேற்பட்ட கட்டுரைகள் மற்றும் ஆய்வு அறிக்கைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

குழந்தைகள் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காகக் கடந்த பத்து ஆண்டுகளாகப் பலவகையிலும் பணியாற்றி வருகிறார். இதற்காக, பல கருத்தரங்குகள், ஆலோசனைக் கூட்டங்கள், கையேடுகள், சிறப்பு உரைகள், பரிந்துரைகள்–இவர் பணியில் அடங்கும்.

வேளாண் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டவர் இவர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 1000 ஏக்கர் நிலங்களை மறுசீரமைப்புச் செய்து வாழ்வாதாரத்தை உறுதி செய்தது, ஆந்திர மாநிலம் கர்வாக்க கிராமத்தில் கூட்டுறவு வேளாண் முறையில் 250 ஏக்கர் நிலங்களை மறுசீரமைப்புச் செய்து தென்னந்தோப்பை உருவாக்கிக் கொடுத்தது, மரபணு மாற்றத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தியது, இயற்கை வேளாண்முறை வாயிலாக நூற்றுக்கும் அதிகமான வயல் வெளிப் பள்ளிகளைத் துவக்கியது, ஒருங்கிணைந்த பயிர் வேளாண்மைக்கு நூல்கள்– கையேடுகள் வெளியிட்டது, புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது – இவரது சீரிய செயல்பாடுகளில் அடங்கும்.

இளைஞர்கள் மேம்பாட்டிற்காகப் பல சேவைகளைப் புரிந்துள்ளார். மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள், வேலைவாய்ப்பு முகாம்கள், ஆலோசனை மற்றும் சிக்கல் தீர்வு மதலியன இவரது சேவைகளுள் குறிப்பிடத்தக்கவை.

உள்ளாட்சிப் பெண் தலைவர்களுக்கான தலைமைப் பயிற்சி, ஆதரவற்ற பெண்களை ஒருங்கிணைத்து வாழ்வாதாரத் திட்டம், தமிழ்நாட்டில் வேளாண் சார்ந்த பணிகள், நெல்லூர் மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்பு போன்றவை திரு.உமாசங்கர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காகச் செய்த சில பணிகளாகும்.

தொண்டு நிறுவனங்கள் எவ்வாறு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக நெறிமுறைகள் குறித்த பயிற்சிகள், அதற்கான கையேடுகள், நிறுவனக் கொள்கைகள், நிதி மற்றும் நிர்வாக மேலாண்மைக்கான கையேடு, கூட்டமைப்பு உருவாக்கம், திட்டச் செயல்பாட்டு ஆலோசனை, திட்ட ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள் போன்றவைகளை ஈடுபாட்டுடன் செய்தவர் இவர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாடத்திட்டக் குழு உறுப்பினராக உள்ள இவர், பாரம்பரிய உணவுத் திருவிழாக்களை நடத்துவது, பாரம்பரிய கலைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வண்ணம் நிகழ்ச்சிகளை நடத்துவது, தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பணி செய்வது முதலானவற்றையும் செய்து மிகவும் சிறப்பாகவும், பலரும் பாராட்டும் வகையிலும் தொண்டாற்றி வருகிறார்.

கொங்குச் சமுதாயப் பற்று நிறையக் கொண்டுள்ள இவர் கிராமப்புற மேம்பாடு குறித்தும், குறிப்பாக, பெண்கள் மற்றும் மாணவர்கள் நலன்களைப் பாதுகாத்து அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது குறித்தும், பெண்களுக்கு வேளாண்மை, உணவு, கலை, பண்பாடு போன்றவற்றில் விழிப்புணர்வு ஊட்டுவது குறித்தும் மேற்கொண்டு வரும் சிறப்பான சேவைகள் எண்ணற்றவர்களுக்குப் பெரும் பயன்களை அளித்துள்ளன.

தன்னலமற்ற, சேவை மனப்பான்மையுடன் டாக்டர் கி.க.உமாசங்கர் அவர்கள் சமூக முன்னேற்றத்திற்காகப் புரிந்துள்ள அரிய சாதனைகளுக்காக, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவருக்கு, 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் சவீதா ராஜேஷ்

கொங்குச் சமுதாயத்தில் ஒரே ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் மட்டுமே உள்ளார். கல்வியாளர், மருத்துவர், சமுதாயக் காவலர், சமூகச் சேவையாளர் எனப் பன்முகங்கள் கொண்டு சாதனைகள் படைத்துள்ள கொங்கு மாமணி டாக்டர் என்.எம்.வீரய்யன் அவர்கள்தான் அந்த ஒருவர். சவீதா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் நிகரற்ற வேந்தர் டாக்டர் வீரய்யன்– திருமதி சரஸ்வதி தம்பதியருக்கு முதலாவதாகப் பிறந்தவர்தான் டாக்டர் சவீதா ராஜேஷ். இவருடைய தம்பி டாக்டர் தீபக் நல்லசாமி.

1975 ஆம் ஆண்டு மே திங்களில் பிறந்த டாக்டர் சவீதா அவர்கள் பயிற்சி பெற்ற ஒரு சிறந்த Radiologist ஆக விளங்குகிறார். The Pupil Saveetha Eco School நிறுவனத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். குழந்தைப் பருவத்திலிருந்தே படிப்பதில் அளப்பரிய ஆர்வம் கொண்டுள்ள சவீதா அவர்கள், அப்பா நடத்திய பல் மருத்துவமனைக்குக் குழந்தையாக இருந்தபோதே அவ்வப்போது சென்று, அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்வதில் மிகவும் ஆர்வமும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார்.

சவீதாமேல் கொண்டிருந்த அளவற்ற பாசத்தின் காரணமாக, ஈரோடு நகரில் டாக்டர் வீரய்யன் அவர்கள் முதல் முதலில் துவக்கிய பல்நோக்கு மருத்துவமனைக்கு, ‘சவீதா மருத்துவமனை’ என்றே பெயரிட்டனர். அதன் பிறகு தொடங்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் சவீதா என்றே பெயரிட்டனர். சவீதா பல்கலைக்கழகம், சவீதா மருத்துவக் கல்லூரி, சவீதா பொறியியல் கல்லூரி ஆகியன குறிப்பிடத்தக்கவை. சவீதா என்ற பெயரை உச்சரிக்காதவர்கள் மிகவும் குறைவு என்று சொல்லும் அளவுக்கு, மிகவும் பிரபலமான பெயராக உள்ளது. தமிழ்நாட்டில் இந்த அளவுக்கு வேறு யாருடைய பெயரிலும் இத்தனை நிறுவனங்கள் இல்லை என்பது டாக்டர் சவீதா அவர்களுக்கு உள்ள தனிப் பெருமையாகும்.

பன்னிரண்டாம் வகுப்பு அரசுத் தேர்வில் 97 சதவிதம் மதிப்பெண்கள் பெற்று, பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத்தார். பின்னர், சென்னை இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து MBBS பட்டமும், MD(Radiology) பட்டமும் பெற்றார். கல்லூரியில் படிப்பில் மிகச் சிறந்து விளங்கியதோடு, நிறையப் புத்தகங்களைப்

படிப்பது, பல துறைகளிலும் திறமைகளை வளர்த்துக் கொள்வது, வெற்றி பெற்றவர்கள், சிறந்த நிர்வாகிகள் வரலாற்றைப் படிப்பது, மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றத்தை அறிந்துகொள்வது போன்ற செயல்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

மருத்துவத் துறையில் பட்டங்களும் பயிற்சிகளும் பெற்ற பின்னர், சில காலம் அடையாறு புற்றுநோய் நிறுவனத்தில் பணியாற்றினார். அவருக்கு மருத்துவத்துறையில் ஆசிரியர் பணி மீது அளப்பரிய விருப்பம் இருந்ததால், சவீதா மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். ஆங்கிலத்தில் பேச்சு, எழுத்து, உரையாடல் ஆகியவற்றில் சிறந்து விளங்கியதோடு, மருத்துவ அறிவும் மிக்க பெற்றிருந்த காரணத்தால் ஒரு சிறந்த மருத்துவக் கல்வியாளராய் சவீதா அவர்கள் விளங்க ஆரம்பித்தார். அவர் நடத்தும் அனாடமி வகுப்புகளை மாணவ, மாணவிகள் ஆவலோடு எதிர்கொண்டு, விரும்பிக் கற்றனர். இவருடைய மாணவர்கள் அனைவரும் நல்ல மதிப்பெண்கள் பெற்றதோடு, பலர் பல்கலைக்கழகத் தேர்வுகளில் சிறப்பிடம் பெற்றனர். பின்னர், கல்லூரி மாணவர்கள் சேர்க்கை, தேர்வு முறைகள் போன்றவற்றை நிர்வகிக்கும் பணிகளில் ஈடுபட்டார். வளர்ந்து வந்த பல்கலைக் கழகத்தின் தேர்வுகள் கட்டுப்பாட்டு அலுவலராகவும், மாணவர் சேர்க்கை இயக்குநராகவும் பொறுப்பேற்று, மிகச் சீரிய முறையில் பணியாற்றி, பலரது பாராட்டுதல்களையும் பெற்றார்.

சவீதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை தொடங்குவதில் ஆரம்பத்தில் இருந்து ஈடுபட்டு, சவால்களைச் சமாளித்து, பல தடைகளைக் கடந்து, இன்று ஆலமரமாய்ச் செழித்தோங்கி, புகழ்பெற்று விளங்கும் நிலைக்குக் கொண்டு வந்ததில் சவீதா அவர்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதோடு, முக்கியக் காரணகர்த்தாவாகவும் விளங்குகிறார் என்றால் அது மிகையல்ல. அவருடைய நீண்ட நாள் கனவாக இருந்தது ஒரு பள்ளியைத் தொடங்குவது என்பது. அது 2012 ஆம் ஆண்டுதான் நனவாயிற்று. The Pupil Saveetha Eco School தொடங்கப்பட்டது. இப்பள்ளியின் ஒவ்வொரு அம்சத்திலும் சிறப்புக் கவனம் செலுத்தி வரும் சவீதா அவர்கள் சிறந்த இயக்குநராக விளங்குவதில் வியப்பொன்றுமில்லை.

தற்போது சவீதா மருத்துவக் கல்லூரிக்கும், சவீதா பள்ளிக்கும் நேரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார். சிறந்த ஆசிரியர் மற்றும் எழுத்தாளராக விளங்கும் சவீதா அவர்கள் இன்னிசைப் பிரியராகவும் உள்ளார். இவருடைய கணவர் டாக்டர் ராஜேஷ் மற்றும் இவருடைய இரண்டு மகள்களும் அம்மாவின் அபாரத் திறமைகளை, புரியும் சாதனைகளை, பன்முக பரிமானங்களைக் கண்டு வியக்காமல் இருக்க இயலாது.

சிறந்த மருத்துவப்பணி, ஆசிரியப்பணி, நிர்வாகப்பணி ஆகியவற்றில் சாதனைகள் படைத்துள்ள டாக்டர் சவீதா ராஜேஷ் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. மொ. குமரவேல்

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் அருகில் உள்ள ஆண்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.மொட்டைய கவுண்டர் – திருமதி சின்னாக்காள் தம்பதியரின் மகனாக 1974 ஆம் ஆண்டுப் பிறந்தவர் கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்த திரு.மொ.குமரவேல்.

ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து 12 ஆம் வகுப்பு வரை மொரப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்று மேற்படிப்புப் பயில போதிய பொருளாதார வசதி மற்றும் சரியான வழிகாட்டுதல் இல்லாததால் கல்லூரிக்குச் சென்று படிக்கவில்லை. இருப்பினும், B.Com., Dip.in Co-op தொலைதூரக் கல்வி வாயிலாகப் பயின்று பட்டதாரி ஆனார்.

வறுமையின் பிடியில் சிக்கி, சரியான வழிகாட்டுதல் இல்லாமல் தான் தவித்த காரணத்தால், தன்னைப் போன்ற, வழிகாட்டுதல் இன்றித் தவிக்கும் கிராமப்புறத்தைச் சார்ந்த கொங்குச் சமுதாய இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் உரிய வழிகாட்டுதல்களை வழங்கவும், தேவையான உதவிகளை இயன்றவரை செய்யும் நோக்கத்திலும் உருவாக்கப்பட்டதுதான் மொரப்பூர் தீரன் சின்னமலை அறக்கட்டளை ஆகும். இந்த அறக்கட்டளையின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் முக்கியப் பங்கு வகித்து வருபவர் இதன் செயலாளராய்ப் பொறுப்பேற்றுச் சீரிய பணியாற்றிவரும் திரு.குமரவேல் ஆவார்.

கொங்குச் சமுதாய இளைஞர்கள் மட்டுமே பயிற்சி பெற்றிடும் வகையில் அறக்கட்டளை சார்பில் இலவச TNPSC பயிற்சி மையம் 2010 ஆம் ஆண்டுத் துவக்கப்பட்டது. முதலாம் ஆண்டிலேயே 2011 ஆம் ஆண்டு 9 பேர் VAO தேர்வில் வெற்றி பெற்றுப் பணியில் சேர்ந்தனர். அதனைத் தொடர்ந்து, இம்மையத்தில் பயிற்சி பெற்று இதுவரை 46 பேர், TNPSC தேர்வுகளில் வெற்றி பெற்று RI, RTO Asst. போன்ற அரசுப் பணிகளில் சேர்ந்துள்ளனர். தற்போதும் தொடர்ச்சியாக VAO, Group II பணிகள், Police, Teacher போன்ற பணிகளுக்கான பயிற்சி வகுப்புகள் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி மையத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஒருங்கிணைப்பதுடன் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் தன்னம்பிக்கை, ஊக்கம், உந்துதல், இலட்சியத்தில் விடா முயற்சி ஆகியவற்றைத் தோற்றுவிக்கவும் வளர்க்கவும் பொருட்டு, தகுதிவாய்ந்த உயர் அலுவலர்களையும், கல்வியாளர்களையும், கொங்குச் சமுதாயச் சான்றோர்களையும் முயற்சி செய்து பயிற்சி மையத்திற்கு வரவழைத்து, கருத்தரங்குகள் நடத்தி, அரிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிட திரு.குமரவேல் ஏற்பாடுகள் செய்து வருகிறார். உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பி.பழனியப்பன், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினர் திரு.இரா.தமிழ்மணி, கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் பரணி கே.பாலசுப்பிரமணி, வழக்கறிஞர் G.V.பிரகாசம் உள்ளிட்ட பல பெருமக்கள் பயிற்சி மையத்திற்கு வருகை தந்து கருத்தரங்குகளில் கலந்துகொண்டு அரிய கருத்துகளை வழங்கியுள்ளனர்.

தீரன் சின்னமலை அறக்கட்டளை மற்றும் அறக்கட்டளை பயிற்சி மையம் சிறப்பாகச் செயல்பட தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றிவருகிறார் திரு.குமரவேல். சமுதாயப் பற்று மிக்க இவர் சேவை நோக்குடன் அறக்கட்டளையின் செயலாளர் பொறுப்பேற்று, கிராமப்புற இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு அரிய தொண்டாற்றி வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி சுகந்தி SSLC வரை படித்தவர். தொண்டுள்ளமும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். இத்தம்பதியருக்கு திலீபன், நிதிஷ்குமார் என இரண்டு குழந்தைகள் உள்ளனர். திரு.குமரவேல் தினத்தந்தி நாளிதழ் நிருபராகவும், LIC முகவராகவும், மக்கள் கணினி மையப் பொறுப்பாளராகவும் உள்ளார்.

கிராமப்புற, கொங்குச் சமுதாய இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக, தீரன் சின்னமலை அறக்கட்டளையை ஏற்படுத்தி, அரசுப்பணித் தேர்வுகளுக்கு, அறக்கட்டளை பயிற்சி மையத்தின் மூலம் இலவசப்பயிற்சி அளித்து, பல அரசு அலுவலர்களை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்துவருபவரும், தன்னலமற்ற சமுதாயப் பணியில் ஈடுபட்டு இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவையான வழிகாட்டுதல் மற்றும் உதவிகளை இயன்றவரை செய்து வருபவருமான திரு.மொ.குமரவேல் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் P. செந்தில்நாதன்

கரூர் மாவட்டம், கவுண்டன்புதூர் வேட்டமங்கலம் என்ற குக்கிராமத்தில் திரு.பெரியசாமி – திருமதி தங்கமணி தம்பதியரின் மகனாக 1978 ஆம் ஆண்டு பிறந்தவர் Dr.P.செந்தில்நாதன்.

இவர் தன்னுடைய பள்ளிப்படிப்பை இரங்கசாமிக் கவுண்டர் உயர்நிலைப் பள்ளி, கரூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி மற்றும் கோபி டைமண்ட் ஜீபிலி மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயின்றார்.BDS பட்டத்தை, சென்னை ஸ்ரீபாலாஜி பல் மருத்துவக் கல்லூரியிலும், MDS பட்டத்தை சவீதா பல் மருத்துவக் கல்லூரியிலும் படித்துப் பெற்றார். Oral and Maxillofacial Surgery – ல் சிறப்புப் பயிற்சி பெற்றவர் இவர்.

தனது பல் மருத்துவச் சேவையை தான் பிறந்த ஊருக்குச் செய்ய நினைத்து கரூர், வெங்கமேட்டில் செல்லம் பல் மருத்துவமனை என்ற பெயரில் சிறிய Dental Clinic யை 2001 ஆம் ஆண்டுத் துவக்கினார். தனது மேற்படிப்பை 2006 ஆம் ஆண்டு சவீதா பல் மருத்துவக் கல்லூரியில் முடித்தவுடன் அதே கல்லூரியில் 2007 ஆம் ஆண்டு உதவிப் பேராசிரியராகச் சேர்ந்து கடந்த 7 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். இளம் சாதனையாளர் விருதை 2011 ஆம் ஆண்டு சவீதா பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் என்.எம்.வீரய்யன் அவர்கள் இவருக்கு வழங்கி கௌரவித்தார்.

அப்போலோ பல் மருத்துவ மையத்தில் Consultant oral and Maxillo facial Surgeon(முக மற்றும் தாடை அறுவை சிகிச்சை நிபுணர்) ஆக 2007 ஆம் ஆண்டு சேர்ந்து, தனது திறமை மூலம் சென்னை அப்போலோ மருத்துவமனை, அப்போலோ ஸ்பெசாலிட்டி

மருத்துவமனை, அப்போலோ–FIRST MED மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளிலும், சுந்தரம் மெடிக்கல் பௌண்டேசன்(Sundaram Medical Foundation) மற்றும் TVS Group ன் Trust Hospital லிலும் பணியாற்றி வருகிறார்.

இது தவிர "ஐடூத்" பல் மருத்துவமனை என்ற பெயரில் பல் மருத்துவமனைகளை நடத்தி வருகிறார். இரண்டு கிளைகள் சென்னையிலும், மற்றொரு கிளை கரூரிலும், இன்னுமொரு கிளை தனது சொந்த ஊரான வேலாயுதம்பாளையத்திலும் நடத்தி வருகிறார்.

கரூரில் செயல்பட்டு வரும் "ஐடூத்" பல்மருத்துவமனை மூலம் கடந்த ஜீன் மாதம் 1, 2 தேதிகளில் பொது மக்களுக்காக இலவச பல்மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தி 310 நோயாளிகளுக்குப் பல் சிகிச்சை அளிக்க உதவி புரிந்தார்.

கொங்கு நண்பர்கள் சங்கம் நடத்திய இலவச மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பல் மருத்துவ சிகிச்சை அளித்துள்ளார். இது தவிர, மனநலம் குன்றிய குழந்தைகள் காப்பகங்களான அருணோதயம், சரணாலயம் காப்பகங்களில் இலவச பல்மருத்துவ சிகிச்சையைத் தனது பல் மருத்துவமனை டாக்டர்களைக் கொண்டு ஒவ்வொரு வருடமும் செய்து வருகிறார்.

தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் பல் மருத்துவத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பல் மருத்துவ மாநாடுகளில் கலந்துகொண்டு பல் சிகிச்சை பற்றிக் கட்டுரைகள் சமர்ப்பித்து, செயல்முறை விளக்கங்களை அளித்துள்ளார்.

இவருடைய மனைவி Dr.கிருபா. இத்தம்பதியருக்கு ஒரு குழந்தை உள்ளது. இளம் வயதிலேயே பல் மருத்துவத்தில் சிறந்த நிபுணத்துவம் பெற்று, சேவை மனப்பான்மையுடனும், சமுதாயப் பற்றுடனும் சிறப்பான முறையில் மருத்துவப் பணியாற்றி வரும் டாக்டர் P.செந்தில்நாதன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. I.கவின் கார்த்திக்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம் முருங்கப்பட்டி கிராமத்தைச் சார்ந்தவரும், வேதியல் துறையில் P.hd., பட்டம் பெற்று சென்னை D.G.வைஷ்ணவா கல்லூரியில் வேதியல் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற முனைவர் திரு.s.இளங்கோவன் – தர்மபுரி மாவட்டம் பொம்மிடி கிராமத்தைச் சேர்ந்தவரும், M.Sc.,(புள்ளியியல்) படித்துக் கணித ஆசிரியயையாகப் பணிபுரிந்தவருமான திருமதி வசந்தி தம்பதியரின் மகனாக 1992 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு.கவின் கார்த்திக். இவரது சகோதரி I.சிநேகா B.E(கம்ப்யூட்டர் சயின்ஸ்) படித்து, மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றியவர்.

இவர் தனது பள்ளிப்படிப்பைச் சென்னை அண்ணாநகரில் உள்ள SBOA பள்ளியில் (CBSE) முடித்தார். அங்குப் பத்தாம் வகுப்பில் கணிதத்தில் நூறு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெற்றார். எதிர்காலத்தில் எந்தத் துறையில் நுழையலாம், +2 ல் என்ன பாடப்பிரிவு எடுக்கலாம் என்று மற்ற மாணவர்களைப் போல இவருக்கும் பலத்த சிந்தனை இருந்தது. அச்சமயம் இவருடைய கணித ஆசிரியை இவரை IIT–ல் சேர்ந்து படி என்று அறிவுறுத்தினார். தன் பெற்றோரிடம் இதைப்பற்றிக் கருத்து கேட்டபோது, அவர்களும் இவரை ஊக்குவித்து, முயற்சிசெய் என்று கூறினார்கள். தன் விருப்பத்திற்கிணங்க கோபாலபுரம் D.A.V ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் +2 வகுப்பில் CBSE சேர்ந்தார் அங்கு IITJEE கோச்சிங் சென்டரில் சேர்ந்து நன்கு பயிற்சி எடுத்து கொண்டார்.

அந்த வருடம் நடந்த IIT நுழைவுத்தேர்வில் அகில இந்திய அளவில் 441 வது இடத்தையும், மாநில அளவில் 7வது இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்தார். அதனால் சென்னை IITல் B.Tech கணினி அறிவியல் படிக்க அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதுவரை கணினி அறிவியல் படித்திராத அவருக்கு, இந்தத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியால் நிறைய மென்பொருள் புத்தகங்கள் மற்றும் இணையத்தளத்தை உபயோகப்படுத்திக் கடுமையான பயிற்சி எடுத்துக் கொண்டார். ஆர்வ மிகுதியால் நிறைய சிறு, சிறு Project செய்தார். அதில் சிறிது வருமானம்கூடக் கிடைத்தது.

தனது நான்காவது செமஸ்டரில் ‘Yahoo’ நடத்திய ‘Hacku’ என்னும் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுச் சாதனை படைத்தார் இந்தப் போட்டியில், இவருடைய ஆர்வத்தையும் திறமையையும் அறிந்த Yahoo நிறுவனம் இவரை மூன்று மாத Internship செய்ய பெங்களூரில் உள்ள அவர்களுடைய அலுவலகத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

அந்த அழைப்பையேற்று, வெற்றிகரமாக அந்த Project முடித்ததன் விளைவாக, மூன்றாம் ஆண்டுப் படிக்கும்போது Google நிறுவனம் இவரை மாணவத் தொடர்பாளாராக அமர்த்தியது. பின்னர், அந்த நிறுவனத்தின் சார்பில் உயர் அலுவலர்கள் சென்னை IIT–க்கு வந்து, அவர்களுடைய நிறுவனத்தில் Internship செய்ய மாணவர்களைத் தேர்ந்தெடுக்க, பலகட்டத் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வுகளை நடத்தினர். திரு. கவின்கார்த்திக் இத்தேர்வுகளில் வெற்றிபெற்று, Internship செய்யத் தேர்வு செய்யப்பட்டார். Yahoo நிறுவனத்தில் Internship-ஐ வெற்றிகரமாக முடித்துப் பாராட்டுப் பெற்றார். இவருடைய வேலைத்திறன் அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்ததால், இவரை வேலைக்குத் தேர்வு செய்யப் பல கட்ட நேர்முகத் தேர்வு (Interview) நடத்தி, அந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் (Mountain View, USA) October 2014 முதல் பணியமர்த்தப் பணி ஆணை வழங்கியுள்ளனர். 2014 மே மாதம் B.Tech Course–ஐ வெற்றிகரமாக முடித்துள்ளார். இன்னும் மூன்று மாதங்களில், அமெரிக்கா சென்று Yahoo நிறுவனத்தில் வேலைக்குச் செல்ல உள்ளார். இச்சாதனை புரிய IIT நிறுவனத்தில் சேர்ந்தது பெரிய வாய்ப்பாக அமைந்தது.

முயற்சி மற்றும் கடின பயிற்சி செய்தால் IIT நுழைவுத்தேர்வில் நல்ல இடம் பெற்று, அங்குப் படித்துப் பெரிய அளவில் சாதிக்கலாம் என்பதற்கு, திரு.கவின் கார்த்திக் சிறந்த முன்னுதாரணமாக உள்ளார். தற்போது பள்ளி மாணவர்களுக்கு IIT நுழைவுத்தேர்வு பற்றியும், அங்குள்ள படிப்புகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றார். மாணவர்களை IITயில் சேர்ந்திடத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறார்.

IIT நுழைவுத் தேர்வில் சாதனை, Yahoo நிறுவனம் நடத்திய தேர்வுகளில் வெற்றி பெற்றுச் சாதனை, அமெரிக்காவில் Yahoo நிறுவனத் தலைமை அலுவலகத்தில் நல்ல சம்பளத்தில் பெரிய வேலை செய்யத் தேர்வு பெற்றுச் சாதனை – இவ்வாறு கணினித் துறையில் சாதனைகள் பல படைத்துள்ள இளம் கணினிப் பொறியாளர் I.கவின் கார்த்திக் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருதளித்துப் பாராட்டி மகிழ்கிறது. இத்துறையில் இன்னும் பல சாதனைகள் புரிந்து, சமுதாயத்திற்கு மேலும் பெருமை சேர்த்திடச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. V.P.கௌதம்

திரு.வெ.ப.கௌதம் திண்டுக்கல் மாவட்டம் ஓடைப்பட்டியைச் சேர்ந்த திரு.வெ.பழனிச்சாமி அவர்களுக்கும் திருப்பூர் மாவட்டம் துலுக்கவலசைச் சேர்ந்த திருமதி ரெ.கஸ்தூரி அவர்களுக்கும் பிறந்த முதற்புதல்வனாவார்.

"**தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்**"

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க, இவருடைய தந்தையார்தான் கௌதம் அவர்களின் வாழ்க்கையில் வெற்றிப் பாதையை அமைக்க வித்திட்டவர். தந்தை அளித்த ஊக்கமும் உற்சாகமும் இவரைத் தொற்றிக்கொண்டது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒரு நல்ல நண்பனாகவும், வழிகாட்டியாகவும் இவரது வாழ்க்கைப் பாதையில் என்றும் ஓர் உந்துகோலாகவும் ஊன்றுகோலாகவும் இருந்தவர் இவருடைய தந்தை திரு.வெ.பழனிச்சாமி.

இவரை ஈன்றெடுத்து உலகுக்கு இவரையும், இவருக்கு இப்பூவுலகையும் அறிமுகப்படுத்திய இவரது நேசமிகு தாயார், வாழ்க்கையின் கடுமையான, சோதனையான காலங்களில் இவரை ஆதரித்தவர், தட்டிக்கொடுத்தவர். திண்டுக்கல் மாவட்டத்தில் கல்விக்குப் பெயர் போன கிராமங்களுள் ஓடைப்பட்டி கிராமமும் ஒன்று. அந்தச் சிறப்பு அதன் மண்ணின் மைந்தனான இவருக்கும் ஒட்டிக்கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இவரது இளைய சகோதரன் சிபி, இவருக்கு ஒரு நல்ல தோழனாகவும், இவருடைய வெற்றிகளினால் பேருவகை அடைபவராகவும் விளங்குபவர்.

இவர் படித்த பள்ளியான ஒட்டன்சத்திரம் கிருத்துவ மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இவருக்குத் தேவையான சுதந்திரத்தைக் கொடுத்து இவரை ஒரு நல்ல மாணவனாகவும், ஒரு மனிதனாகவும் உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தது. படிப்பு மட்டும் அல்லாமல் விளையாட்டு (சதுரங்கம்) மற்றும் கல்விசார் துறைகளில் (வினாடி வினா போன்றவைகளில்) இவர் சிறப்புப் பெற்று விளங்கியதற்கு இவர் பயின்ற பள்ளியே காரணம்.

இவர் படித்து வளர்ந்த ஒட்டன்சத்திரம் ஊரில் இவருடைய சொந்தங்களும், இவரது பள்ளிசார் நண்பர்களும் இவர்மேல் மகத்தான நம்பிக்கையை வைத்து இவரை உற்சாகப்

படுத்தினர். இவருடைய கல்லூரி நண்பர்கள் இவருக்கு எப்பொழுதும் பக்கபலமாக நின்று ஊக்கப்படுத்தினர்.

இவர் குடிமைப்பணிகள் (Civil Services) தேர்வுகளில் வெற்றிபெற சங்கர் ஐ.ஏ.எஸ் அகாடமி நிறுவனர் திரு.சங்கர் அவர்களும், அங்கு இணை இயக்குநராகப் பணியாற்றிய திரு.சந்திரசேகர் அவர்களும் முக்கியப் பங்காற்றினர். திரு.சங்கர் இவருடைய வெற்றிக்கு முதுகெலும்பாகவும் முழுமுதற் காரணமாகவும் இருந்துள்ளார்.

இந்திய ஆட்சிப்பணி (IAS) என்ற இவரது வாழ்நாள் கனவு இன்று நனவாகியுள்ளது. இந்திய ஆட்சிப் பணி (IAS) இல் மட்டுமல்லாமல் இந்திய வனப் பணி(IFS)–இலும் இந்திய அளவில் மூன்றாம் இடம் பெற்றார் என்பதும் இவருடைய சாதனையாகும். இப்பணியில் செவ்வனே பணியாற்றி அனைத்து மக்களுக்கும் ஒரு சேவகனாகக் கடமையைச் செய்ய விழையும் திரு.கௌதம், சமுதாயப் பற்று மிக்கவர்.

நமது மக்களுக்கு இவர் ஒரு தாழ்மையான வேண்டுகோளை முன் வைக்கிறார். “தங்களது குழந்தைகளுக்குச் சுதந்திரமான ஒரு சூழலைத் தாருங்கள். அப்பொழுது அவர்கள் ஒரு சுயசிந்தனைமிக்க, ஆற்றல்மிகு குடிமகன்/குடிமகளாக வருவார்கள். பெற்றோரின் கடமையானது பிள்ளைகளின் வாழ்க்கைக்கு வழிகாட்டுதலாக இருக்கலாம்; வழியைத் திணிப்பதாக இருக்கக்கூடாது” என்பதுதான் இவரது வேண்டுகோள். இவரது பெற்றோர் இவருக்குச் சுதந்திரம் என்னும் வரத்தைத் தந்ததனால்தான் இவர் இன்று ஒரு உயர்ந்த நிலையை அடைய முடிந்திருக்கிறது என்பது இவருடைய உறுதியான கருத்தாகும். நம்முடைய சமுதாயத்தைச் சார்ந்த, சங்கத்தைச் சார்ந்த பிள்ளைகளோ, உற்றார் உறவினரோ குடிமைப் பணிகள்(Civil Service) தேர்வு எழுத முடிவெடுத்திருந்தால் அவர்களுக்கு வழிகாட்ட திரு.கௌதம் தயாராக இருக்கிறார். இவரை President.ceg@gmail.com என்ற மின்னஞ்சல் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம். “இந்த IAS தேர்வில் வெற்றியடைவது ஒன்றும் இயலாத காரியம் கிடையாது. கடின உழைப்பும், ஊக்கமும், சீரான சிந்தனையும் இருந்தால் வெற்றி நிச்சயம்” எனக் கூறும் இவர், தனது இந்த வெற்றி நமது மக்களுக்கு ஓர் ஊக்கமாக அமையும் என்று நம்புகிறார். இதுபோன்ற துறைகளில் நம் மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் இருந்து வரும் மாணவர்களுக்கு, தான் ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்று விழைகிறார், இந்தச் சாதனையாளர்.

IAS பணிக்குத் தேர்வு பெற்றுச் சாதனை படைத்துள்ளவரும், குடிமைப் பணித் தேர்வு எழுத விழையும் நமது சமுதாய இளைஞர்களுக்கு உதவ ஆர்வமுடன் முன் வந்திருப்பவருமான திரு. கௌதம் IAS அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# வெளிநாட்டுக் கொங்கு சாதனையாளர்



## திரு. க.சுப்பிரமணியம்

புலம்பெயர்ந்த கொங்கு மக்கள் 1957 ஆம் ஆண்டுத் தங்கள் முன்னேற்றத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் மலேசியா நாட்டில் ‘மலேசிய நாமக்கல் நலனபிவிருத்தி மன்றம்’ என்ற அமைப்பை ஏற்படுத்தினர். தற்போது இந்த அமைப்பிற்கு ஏழு மாநிலங்களில் பதினாறு கிளைகள் பதிவு பெற்றுச் செவ்வனே செயல்பட்டுவருகின்றன.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற 56 ஆம் ஆண்டுப் பேராளர் மாநாட்டில் கிள்ளான் கிளையில் தலைவர் திரு.க.சுப்ரமணியம் அவர்கள் மலேசிய நாமக்கல் நலனபிவிருத்தி மன்றத்தின் தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொங்கு மக்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பைப் பெற்றார்.

திரு.க.சுப்ரமணியம் அவர்கள் 20.06.1963 ஆம் நாள் மலேசியாவிலுள்ள சிப்பாங் சுங்கை பிளாங்கான் தோட்டத்தில் பண்ணை குலத்தைச் சேர்ந்த திரு.சி.கருப்பையா கவுண்டருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தை நினைவில் வாழும் திரு.சி.கருப்பையா கவுண்டர் அவர்கள் நாமக்கல், பரமத்தி வேலூர், கபிலர் மலைக்கு அருகிலுள்ள கபலக்குறுச்சி என்ற ஊரில் பண்ணை குலத்தில் 1921 இல் பிறந்தவர். தாயார் திருவாட்டி கா.பொங்கியம்மாள் அவர்கள் அதே ஊருக்கு அருகிலுள்ள சேடர்பாளையத்தில் மணியன் குலத்தில் பிறந்தவர்.

திரு.க.சுப்ரமணியம் அவர்கள் சுங்கைரவாங் தமிழ்ப்பள்ளியில் தொடக்கக்கல்வியை முடித்து தஞ்சோங் சிப்பாட் இடைநிலைப்பள்ளியில் உயர் கல்வியைப் பெற்றார். 1980 ஆம் ஆண்டு தொடங்கித் தனியார் துறையில் பணிக்கு அமர்ந்து அதில் பதவி உயர்வு பெற்று உயர் நிலை நிர்வாகியாகப் பதவி வகித்தார். 2013ஆம் ஆண்டு சொந்தமாகத் தொழில் தொடங்க வாய்ப்புக் கிட்டியபோது, போக்குவரத்துத் துறையில் ஆர்வம்கொண்டு கேஎஸ்எம் லோஜிஸ்டிக் பி.லிமிடெட் என்ற நிறுவனத்தைத் தொடங்கி அதன் நிர்வாக இயக்குநராகச் செயல்பட்டு வருகிறார்.

அவர், 25.06.1988அன்று கண்ணன் குலத்தைச் சேர்ந்த செல்வி ஆ.சுமதியை வாழ்க்கைத் துணையாகப் பெற்றார். அவர்களுக்கு செல்வன் சு.சுசேந்திரன், செல்வன் சு.சுதர்சனன் என்ற மகன்களும், செல்வி சு.சுக்கீர்த்தனா என்ற மகளும் உள்ளார். மூத்தவர் திரு.சு.சுசேந்திரன் சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். செல்வி சு.சுக்கீர்த்தனா சரவாக்

பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு மாணவி. இளையவர் திரு.சு.சுதர்சனன் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்குப் படித்து வருகிறார்.

தந்தையின் வழிகாட்டலில் கொங்கு இனப் பற்றுடன் வளர்ந்த திரு.க.சுப்ரமணியம் கொங்கு மக்களுக்குத் தன்னால் இயன்ற சேவை செய்ய வேண்டுமென்ற வேட்கையில் 1984 ஆம் ஆண்டு மலேசிய நாமக்கல் நலனபிவிருத்தி மன்றம், கிள்ளான் கிளையில் வாழ்நாள் உறுப்பினராக இணைந்து கிள்ளான் கிளை செயலவை உறுப்பினராகவும் பிறகு கிளையின் செயலாளராகவும், துணைத்தலைவராகவும் பொறுப்புகளை ஏற்று, இன்று கிள்ளான் கிளையின் தலைவராகச் செவ்வனே செயல்பட்டு வருகிறார்.

கிளை அளவில் சிறப்பாகச் செயல்பட்ட அவர் தலைமையகப் பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் செயலவை உறுப்பினராகவும், பிறகு பொதுச் செயலாளராகவும், தொடர்ந்து துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்த அவர் இன்று மன்றத்தின் தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றுச் செவ்வனே செயல்பட்டு வருகிறார்.

தேசியத்தலைவராகப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளாகத் துடிப்புடன் செயல்பட்டு, மன்றத்தின் சார்பில் பெரிய அளவில் ஓராயிரம் பேரைக் கூட்டி விருந்து நடத்தி மன்றத்திற்குக் கணிசமான தொகையைத் திரட்டினார். 2014 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கொங்கு வணிகர்களைத் திரட்டி வணிகக் கருத்தரங்கை நடத்தினார். அதில் தமிழ் நாடு, சிங்கை வணிகர்களும் கலந்துகொண்டனர். இதுபோன்ற கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டுள்ளார். இவ்வாண்டு, சிரம்பான் கிளையின் ஏற்பாட்டில் மன்றத்தின் 58ஆம் ஆண்டுப் பேராளர் மாநாட்டைக் கூட்டினார். அடுத்து, 2016ஆம் ஆண்டு மன்றத்திற்கு வைரவிழா என்பதால் மிகப் பெரிய அளவில் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அதில் தமிழ் நாடு, கர்நாடகம், சிங்கப்பூர் கொங்கு அமைப்புகளுக்கும் அழைப்புகள் வழங்கப்படும்.

இவ்வாண்டுத் தொடக்கத்தில் 'மலேசிய நாமக்கல் நலனபிவிருத்தி கூட்டுறவுக்கழகம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்துப் பதிவு செய்தார். இப்போது அவர் தலைமையில் அதற்கான உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதற்கு வணிகத்தில் நன்கு அனுபவம் பெற்ற ஒன்பது கொங்கு இன இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவை மட்டும் இல்லாமல், மலேசிய இந்தியர் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியில் இணைந்து ஒரு கிளைக்குத் தலைவராக இருக்கிறார். ஆன்மிகத்தில் ஆர்வம்கொண்டு கிள்ளான் அண்டலாஸ் அருள்மிகு மாரியம்மன் கோவிலின் பொருளாளராகத் தொண்டு செய்வதுடன் சிலாங்கூர் மாநில அரசு சார்பற்ற இயக்கங்களின் கூட்டமைப்பில் செயலவை உறுப்பினராகவும் இருக்கிறார்.

மலேசிய நாட்டுக் கொங்கு மக்கள் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அளப்பரிய சேவையாற்றியுள்ள, சமுதாயப் பற்றுமிக்க திரு.க.சுப்ரமணியம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'வெளிநாட்டுக் கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுவதில் பெருமை கொள்கிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. கே.ஜி.முருகவேல்

திருப்பூர் மாவட்டத்தில் வஞ்சிபாளையம் அருகில் உள்ள முருகம் பாளையம் என்ற சிறிய கிராமத்தில் திரு.கனேசமூர்த்தி – திருமதி கோவிந்தம்மாள் தம்பதியருக்கு 1962–ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு.கே.ஜி.முருகவேல். இவர் வேளாண் துறையில் படைத்துள்ள சாதனை எல்லோரையும் மலைக்க வைக்கும்; வியக்க வைக்கும். திசு வளர்ப்பில் பேரீச்சையை நட்டு, மகத்தான அறுவடையைச் செய்து சாதனை படைத்துள்ளார் இவர்.

திருப்பூர் மங்களம் உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே பயின்ற திரு.முருகவேல், திருப்பூரில் ஒரு கார்மென்ட் நிறுவனத்தில் சுமார் 20 ஆண்டுகள் வேலை செய்தார். திடீரென்று விபத்து ஒன்றில் சிக்கிய இவர் சில நாள்கள் படுக்கையிலேயே இருந்தார். கையிலே காசு இல்லை. ஆனால் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற இலட்சியமும் மன உறுதியும் இருந்தது.

2008 ஆம் ஆண்டு, செப்டம்பர் 19–ஆம் தேதி தினமலரில் வந்த ஒரு செய்தி இவருடைய வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அந்தச் செய்தி, திண்டுக்கல் மாவட்டம் முள்ளிப் பாடியைச் சேர்ந்த அன்பழகன் என்பவர், பேரீச்சையை வளர்த்து எவ்வாறு அதிக லாபம் அடைந்தார் என்பதைப் பற்றியதாகும். பேரீச்சையானது மூன்று முறைகளில் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. ஒன்று – விதையின் மூலம்; இரண்டாவது – பக்கக் கன்றுகள் மூலம்; மூன்றாவது – திசுவளர்ப்பு முறை மூலம். முதல் இரண்டு முறைகளை விட, திசு வளர்ப்பு முறை மிகச் சிறந்த முறையாகும். ஆனால், இந்தியாவில் திசு வளர்ப்பு பேரீச்சைக் கன்று உற்பத்தி கிடையாது. இங்கிலாந்தில் மட்டும் ஆய்வுக் கூடங்களில் திசு உற்பத்தி செய்யப்படுகிறது. இத்திசுக் கன்றுகள் வளைகுடா நாடுகளில் பராமரிக்கப்பட்டு, பின் இந்தியாவிற்குக் கொண்டுவர வேண்டும். இந்த முறையில் பேரீச்சையை வளர்த்து, அதில் அதிக லாபம் அடைந்தார், முள்ளிப்பாடி அன்பழகன் என்பதுதான் முருகவேல் படித்த செய்தி.

திரு.முருகவேல் உடனே செயலில் இறங்கினார். நிலத்தின் ஒரு பகுதியை ரூபாய் பத்து லட்சத்திற்கு விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு பேரீச்சை திசுக் கன்றுகளை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்தார். அவிநாசி வட்டம் வஞ்சிப்பாளையத்தில் சுமார் மூன்று ஏக்கரில்

200 திசு வளர்ப்புப் பேரீச்சைக் கன்றுகளை, கடந்த 2009 ஆம் ஆண்டு நடவு செய்தார். இஸ்ரேல் நாட்டுத் தொழில் நுட்ப முறையில் குழந்தையை வளர்ப்பதுபோல் பேணிக்காத்து வளர்த்தார். இவரது கடுமையான உழைப்பாலும், திறமையான பராமரிப்பாலும் 28 மாதங்களிலேயே பேரீச்சை மரங்கள் பழங்களைக் கொடுத்தன. திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்படும் பர்ரி என்ற புதிய ரக பேரீச்சைகளை பதப்படுத்தாமல் அப்படியே சாப்பிடலாம்.

ஓர் ஏக்கருக்கு 30 கிலோ முதல் 40 கிலோ வரை பழங்கள் கிடைக்கின்றன. ஏக்கருக்கு 65 மரங்கள் வீதம் சராசரியாக 2600 கிலோ பழங்கள் கிடைக்கின்றன. பழங்களைக் கிலோ ரூ 300 வீதம் விற்பதன் மூலம் 3 ஆவது ஆண்டில் இருந்து ஆண்டிற்கு ரூ 6 லட்சம் முதல் 8 லட்சம் வரை வருமானம் இவருக்குக் கிடைக்கிறது. இந்தப் பேரீச்சை மரங்கள் 60 ஆண்டுகள் வரை பழங்களை விளைவிக்கும்.

தமிழகத்திலேயே இரண்டாவது விவசாயியாக திரு.முருகவேல் அரபுநாடுகளில் மட்டுமே விளையும் 'பர்ரி' ரக பேரீச்சைப் பழங்களை விளைவித்துச் சாதனை படைத்தார். இந்த பர்ரி ரகப் பேரீச்சை வெளிர் பச்சையும், மஞ்சளும் கலந்த நிறத்தில் இருக்கும். மிகவும் சுவையுடன் உள்ளதால் மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. தற்போது பர்ரி ரக பேரீச்சை பயிரிட்டு, ஏக்கருக்கு ரூ 10 லட்சம் வரை வருமானம் கிடைக்கிறது.

இவருடைய சாதனையை மாவட்ட ஆட்சித் தலைவர், தென்னை வளர்ச்சி வாரியத் தலைவர், வேளாண் பல்கலை உயர் அலுவலர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் APJ அப்துல் கலாம் முதலானோர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இவர் விளைவிக்கும் பேரீச்சைப் பழங்கள் மருத்துவ குணங்கள் பல கொண்டதாகும். உடல் நலத்திற்கு மிக்க உறுதுணையாக உள்ளன. புற்றுநோய், இதய நோய் முதலானவற்றைக் குணப்படுத்தும் அரிய குணம் கொண்டவை.

இந்தப் பேரீச்சைப் பழங்கள் இயற்கை முறையில் விளைவிக்கப்படுவன; உடல் நலத்திற்கு மிகவும் உகந்தது; சத்து வாய்ந்தது; தித்திக்கும் சுவையானது; வசீகரிக்கும் நிறம் உடையது. இவருடைய மனைவி திருமதி ஜெயபாரதி பல வகையிலும் இவருக்குப் பக்க பலமாக உள்ளார். இவருக்கு ராகவி என்ற மகளும் அஜய் பிரணவ் என்ற மகனும் உள்ளனர்.

திசு வளர்ப்பு முறையில் பேரீச்சையை நட்டு, மகத்தான அறுவடையைச் செய்து வேளாண் துறையில் வியக்க வைக்கும் சாதனை படைத்து, தமிழகத்திற்கும், சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள திரு.கே.ஜி.முருகவேல் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்



## திரு. V.செந்தில்பிரபு IFS

திருப்பூர் மாவட்டம், மூலனூர் வட்டம் வெங்கல்பட்டி கிராமத்தில் திரு.வஞ்சிமுத்து – திருமதி நாச்சாத்தாள் தம்பதியருக்கு 1989 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு.V.செந்தில்பிரபு.

இவர் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற IFS தேர்வில் அகில இந்திய அளவில் 56–ஆம் இடம் பெற்றுத் தேர்வாகியுள்ளார். B.E.படிப்பைத் திண்டுக்கல் P.S.N.A கல்லூரியில் முடித்துப் பட்டம் பெற்ற பின்னர், சென்னை சங்கர் IAS அகாடமியில் சேர்ந்து, குடிமைப் பணித் தேர்வுக்குப் பயிற்சி பெற்றார். முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று, IFS பணிக்குத் தேர்வு பெற்றுள்ளார்.

சேரலான் கூட்டத்தைச் சேர்ந்த இவரின் தந்தை கொங்குச் சமுதாய வளர்ச்சியிலும், சமூக சேவையிலும் மிகவும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர். தற்போது திண்டுக்கல்லில் ‘செந்தில் ரெசிடென்சி’ என்ற ஹோட்டலை நடத்தி வருகிறார். தன்னம்பிக்கை, கடும் உழைப்பு, முறையான பயிற்சி ஆகியவை காரணமாக IFS பணிக்குத் தேர்வு பெற்றுள்ள திரு.V.செந்தில்பிரபு அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்



## திரு. K.சரவணகுமார்

கோவை மாவட்டம், தேவராயபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு D.R.காளிச்சாமி – திருமதி வேலுமணி தம்பதியருக்கு 1991 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு.கே.சரவணகுமார்.

இவர் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய அரசின் குடிமைப்பணி தேர்வில் அகல இந்திய அளவில் 722 ஆம் இடத்தைப் பெற்று IRS பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சமூகவியலில் B.A.பட்டம் மட்டுமே பெற்றுள்ள இவர், முதல் முயற்சியிலேயே IRS பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது வியத்தகு சாதனையாகும். பவளம் கூட்டத்தைச் சேர்ந்த இவரின் தந்தை எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்ற முதுமொழிக்கேற்ப, தன்னம்பிக்கை, அயரா உழைப்பு ஆகியன கொண்டு IRS பணிக்குத் தேர்வு பெற்றுச் சாதனை படைத்துள்ள திரு.K.சரவணகுமார் அவர்கட்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்



## செல்வன் லெ.சஞ்சன்

சென்னை அண்ணா நகரில் வசித்து வரும் Dr.சி.லெனின் (சென்னை அப்போலோ மருத்துவமனையில் எலும்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்– Dr.திருமதி என்.அனுஜா (சவீதா பல் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியை) தம்பதியரின் மகனும், ENT நிபுணர் Dr.எஸ் நடராஜன் மற்றும் நாமக்கல் வழக்கறிஞர் திரு.ஆர்.சின்னுசாமி அவர்களின் பேரனுமான ஏழரை வயதான செல்வன் லெ.சஞ்சன் சென்னையில் உள்ள Bhavan's Rajaji Vidyashram பள்ளியில் 3ஆம் வகுப்பு மாணவனாக உள்ளார். இவர் MARRS International Spelling Bee நிறுவனம் டெல்லியில் ஏப்ரல் மாதம் நடத்திய தேசிய அளவிலான Spelling Bee போட்டியில் 6 வயதிலிருந்து 8 வயது வரையிலான பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். இது மட்டுமல்லாமல், இப்போட்டியில் 6 வயதிலிருந்து 16 வயது வரையிலான பிரிவிலும் பங்கேற்று STAR SPELLER மற்றும் BEST PERFORMER OF THE NATIONAL CHAMPIONSHIP ஆகிய பரிசுகளையும் வென்றுள்ளார். அம்மூன்று பரிசுகளுடன் ரூபாய் 2,10,000 /– படிப்பு ஊக்கத் தொகையும் இவருக்கு வழங்கப்பட்டது. இதே நிறுவனம் நடத்திய சென்னை மற்றும் மாநில அளவிளான Spelling Bee போட்டிகளிலும் முதல் பரிசினை வென்றுள்ளார்.

ஏழரை வயதில் வியத்தகு சாதனைகள் புரிந்துள்ள செல்வன் லெ.சஞ்சனுக்குச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது. இவர் மேன்மேலும் சாதனைகள் படைக்கச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்



## செல்வி M.S.தர்ஷனா

ஈரோடு மாவட்டம், மாமரத்துப் பாளையம் திரு.S.சக்திவேல் – திருமதி பானுமதி தம்பதியரின் மகள் செல்வி M.S.தர்ஷனா. 8 வயது நிரம்பியவர். ஈரோடு திண்டல் பாரதி வித்யா பவன் பள்ளியில் மூன்றாம் வகுப்புப் படித்துவருகிறார்.

பெற்றோர் தந்த ஊக்கத்தாலும், சரியான பயிற்சியாலும், அளப்பரிய திறமையாலும் செஸ் போட்டியில் தேசிய அளவிலும், உலக அளவிலும் சாதனைகள் பல படைத்து, பதக்கங்களையும், பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் அள்ளி வந்துள்ளவர், இந்தச் சாதனைச் சிறுமி தர்ஷனா. இவரது அண்ணன் திவ்யபிரசாத், பயிற்சியாளர் செந்தில்வேல் இவரது சாதனைகளுக்கு உதவியவர்கள்.

ஏழு வயதுக்குட்பட்டோர் பிரிவில் 2012 ஆம் ஆண்டு செஸ் போட்டியில் மாநில அளவில் மூன்றாம் இடம், 2013 ஆம் ஆண்டு மாநில அளவில் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கம், 2013 ஆம் ஆண்டு பூனே நகரில் நடைபெற்ற தேசிய அளவிலான செஸ் போட்டியில் முதல் இடம் பெற்றுத் தங்கப் பதக்கம், 2013 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் என இவரின் சாதனைகள் மலைக்க வைக்கின்றன.

தொடர்ந்து மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், உலக அளவிலும் சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்றுச் சாதனைகள் படைத்து வரும் சிறுமி தர்ஷனாவிற்குச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது. அவருடைய பெற்றோர்க்கு வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறது. செல்வி தர்ஷனா மேலும் பல சாதனைகள் படைக்கச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்



## செல்வி ஐஸ்வர்யா ஆனந்த்

ஈரோடு மாநகரைச் சேர்ந்தவரும், சென்னை ஏர் இந்தியா மேலாளருமான திரு.V.M.ஆனந்த்– திருமதி சாந்தி ஆனந்த் தம்பதியரின் மகள் செல்வி ஐஸ்வர்யா ஆனந்த் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற, அகில இந்திய அளவிலான IIT Chennai Humanities & Social Science - HSEE 2014 நுழைவுத் தேர்வில், OBC பிரிவில் நான்காம் இடத்தைப் பிடித்துச் சாதனை புரிந்துள்ளார்.

சுமார் 10,000 மாணவர்கள் எழுதிய இத்தேர்வு சென்னை IIT – யினால் நடத்தப்பட்டு, தகுதி அடிப்படையில் 46 மாணவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. Masters Degree in Humanities and Social Science ஐந்தாண்டுப் பட்டப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு இதுவாகும். சென்னை DAV பள்ளியில் பத்தாம் வகுப்பு வரையிலும், பின்னர், ஈரோடு பாரதி வித்யா பவன் பள்ளியில் +2 படிப்பும் முடித்தவர் செல்வி ஐஸ்வர்யா ஆனந்த்.

இந்த முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் கிளைகளில் பணிபுரியும் வாய்ப்புப் பெறுகின்றனர்.

IIT சென்னை நடத்திய, ஐந்தாண்டு முதுநிலைப் பட்டப் படிப்பிற்கான, சவாலான HSEE–2014 நுழைவுத் தேர்வில் OBC பிரிவில் நான்காம் இடத்தைப் பிடித்துச் சாதனை படைத்துள்ள செல்வி ஐஸ்வர்யா ஆனந்த் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்



## செல்வி M.ஹரிணி

சேலம் மாவட்டம், சிலுவம்பாளையம் சேர்ந்தவரும், காவல்துறை ஆய்வாளருமான திரு.N.முருகேசன் – திருமதி கோகிலா தம்பதியரின் புதல்வியான செல்வி எம்.ஹரிணி, திருச்சி ஆரோக்கியமாதா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு வரையிலும், பின்னர் சென்னை மான்போர்ட் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் +2 படிப்பும் முடித்தவர்.

2012 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற யோகா மாநில மாநாட்டின் ஒரு நிகழ்வாக தண்ணீரில் ஒரு மணி நேரம் மிதந்து சாதனை படைத்தவர் இவர். தண்ணீரில் மிதந்தவாறே தனுராசனம், பத்மாசனம் உள்ளிட்ட ஆசனங்கள், பல்வேறு சாதனை நிகழ்வுகளை நிகழ்த்தி அனைவரையும் வியக்க வைத்தவர் இவர். பரத நாட்டியத்திலும் மிக வல்லவர். யோகா, நடனம் என்று தனித் திறமைகளில் ஜொலித்து, மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்று, ‘Champion of Champions’ பதக்கம் உட்பட பல பதக்கங்களையும், பரிசுகளையும் வென்று சாதனை படைத்தவர் இவர்.

இவையன்றி, கம்ப்யூட்டர், ஓவியம், கிளாஸ் பெயின்ட்ங் என்று பல துறைகளிலும் சாதனைகள் புரிந்துள்ள இவர், படிப்பிலும் சிறந்து விளங்கி வருபவர்.

யோகாவிலும், பரதத்திலும் அற்புத சாதனைகள் படைத்து, அனைவரையும் அசத்தியுள்ள செல்வி M.ஹரிணி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

## 2014 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.வர்ஷினி |
| த/பெ | : | V.சேனாபதி |
| ஊர் | : | பொருளூர், திண்டுக்கல் மாவட்டம். |
| பள்ளி | : | Veveaham Girls Hr.Sec.School, Dharapuram. |
| மதிப்பெண் | : | 499/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் முதல் இடம். |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.லோகவர்ஷினி |
| த/பெ | : | A.சதாசிவம் |
| ஊர் | : | மேட்டூர் அணை, சேலம் மாவட்டம். |
| பள்ளி | : | ஆதர்ஸ் வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, அந்தியூர் |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | மூ.ஹரீஷ்குமார் |
| த/பெ | : | பெ.மூர்த்தி |
| ஊர் | : | ஆலத்துக்கோம்பை, சத்தியமங்கலம். |
| பள்ளி | : | பன்னாரி அம்மன் பாரத் நிகேதன் மேல்நிலைப் பள்ளி. |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ச.மோனிகா |
| த/பெ | : | கா.சக்திவேல் |
| ஊர் | : | குருப்ப நாயக்கன் பாளையம், பவானி வட்டம். |
| பள்ளி | : | ஆதர்ஷ் வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | N.V.பிரவீன் |
| த/பெ | : | N.வேலுசாமி |
| ஊர் | : | வில்லிபாளையம், பரமத்தி வேலூர் வட்டம். |
| பள்ளி | : | Green Park Matric HSS, Namakkal. |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ச.மைதிலி |
| த/பெ | : | K.K.சதாசிவம் |
| ஊர் | : | கோதை நகர், கரூர் மாவட்டம். |
| பள்ளி | : | Bharani Park Matric HSS, Vennaimalai. |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | N.G.ரவீணா |
| த/பெ | : | கு.கோவிந்தராசன் |
| ஊர் | : | முல்லை நகர், நாமக்கல் |
| பள்ளி | : | Green Park Girls MHSS, Bodhupatty. |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | A.சந்தியா |
| த/பெ | : | A.ஆதிகேசவன் |
| ஊர் | : | ஆண்டிப்பட்டி கிராமம், தருமபுரி மாவட்டம். |
| பள்ளி | : | கொங்கு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மொரப்பூர் |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.சுபமஞ்சரி |
| த/பெ | : | R.கமலநாதன் |
| ஊர் | : | கோவிந்தசாமி நகர், அரூர், தருமபுரி மாவட்டம். |
| பள்ளி | : | இந்தியன் மெட்ரிகுலேசன் HSS, கோபிநாதம்பட்டி |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | வே.ஸ்ரீவர்ஷா |
| த/பெ | : | க.வேலுசாமி |
| ஊர் | : | கணபதி நகர்,மாரமங்கலத்துப் பட்டி, சேலம் மாவட்டம். |
| பள்ளி | : | Bharani Park M HSS, Vennimalai. |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.T.புவன்யாதேவி |
| த/பெ | : | S.தியாகராஜன் |
| ஊர் | : | பச்சுடையாம்பட்டிபுதூர், நாமக்கல் மாவட்டம். |
| பள்ளி | : | Green Park Girls MHSS, Bodhupatty |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | த. சிவகார்த்திகா |
| த/பெ | : | M.தங்கராஜ் |
| ஊர் | : | செம்மாண்டம்பாளையம், கரூர் மாவட்டம். |
| பள்ளி | : | அரசு மேல் நிலைப் பள்ளி, தென்னிலை |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.S.கோகுலப்பிரியா |
| த/பெ | : | பெ.செந்தில்குமார். |
| ஊர் | : | பொதிகை நகர், திருப்பூர் மாவட்டம். |
| பள்ளி | : | EHKN M HSS, M Palayam. |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம் |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | V.M.குமாரதர்ஷினி |
| த/பெ | : | V.S.மருதாசலம் |
| ஊர் | : | நாகதேவம்பாளையம், ஈரோடு மாவட்டம். |
| பள்ளி | : | SARADHA MS, MODACHUR |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம் |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | M.நவீனா |
| த/பெ | : | மணி |
| ஊர் | : | பெருமம் பாளையம், நாமக்கல் மாவட்டம். |
| பள்ளி | : | Green Park Girls MHSS, Bodhupatty |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம் |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | R.லோகேஷ் |
| த/பெ | : | ராமசாமி |
| ஊர் | : | காரியமங்கலம் கிராமம், தருமபுரி மாவட்டம் |
| பள்ளி | : | செந்தில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தர்மபுரி |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம் |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | G.ஓவியா |
| த/பெ | : | Dr.S.கௌதமன் |
| ஊர் | : | S.R.V நகர், நாமக்கல் மாவட்டம் |
| பள்ளி | : | ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி, இராசிபுரம். |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | த.கௌசல்யா |
| த/பெ | : | தங்கவேல் |
| ஊர் | : | பொன்விழா நகர், நாமக்கல். |
| பள்ளி | : | Green Park Girls MHSS, Bodhupatty. |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | P.நந்தினி |
| த/பெ | : | M.பழனிசாமி |
| ஊர் | : | வேப்ப மரத்துப்பட்டி, சேலம் (மா). |
| பள்ளி | : | ஸ்ரீ சரவணாநிகேதன் மேல்நிலைப்பள்ளி. நெரிஞ்சிப்பேட்டை. |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | J.விழிவேந்தன் |
| த/பெ | : | ஜெயசங்கர் |
| ஊர் | : | A.வெள்ளாம்பட்டி கிராமம், தருமபுரி மாவட்டம். |
| பள்ளி | : | ஜெயம் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரூர். |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.பிரீத்தி |
| த/பெ | : | P.செல்வக்குமார் |
| ஊர் | : | பொரசப்பாளையம்,நாமக்கல். |
| பள்ளி | : | கொங்குநாடு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நல்லிப்பாளையம். |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம். |

## முதல் இடம்(CBSE)

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஷிவானி வினோத் |
| த/பெ | : | M.வினோத் |
| ஊர் | : | சேத்பட், சென்னை. |
| பள்ளி | : | Chennai Public School,. |
| மதிப்பெண் | : | 10 / 10 |
| சிறப்புத் தகுதி | : | முதல் மதிப்பெண் பெற்றுள்ளார் |

## முதல் இடம்(CBSE)

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.சூர்யா |
| த/பெ | : | S.செந்தில்குமார் |
| ஊர் | : | சுப்பைய்யா பிள்ளை லே–அவுட், கரூர். |
| பள்ளி | : | எமரால்ட் வேலீ, ஏற்காடு அடிவாரப்பள்ளி. |
| மதிப்பெண் | : | 10 / 10 |
| சிறப்புத் தகுதி | : | முதல் மதிப்பெண் பெற்றுள்ளார். |

2014 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசு மற்றும்(CBSE) பொதுத் தேர்வில் கலந்துகொண்டு கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 2014 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் (முதற்பாடம் – தமிழ் மொழி)

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | T.இலக்கியபிரியா |
| த/பெ | : | V.G.தங்கவேல் |
| ஊர் | : | ஆசிரியர் காலனி,பரமத்தி வேலூர். |
| பள்ளி | : | விவேகானந்தா மேல்நிலைப் பள்ளி, பவுண்டமங்களம் |
| மதிப்பெண் | : | 1188/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் முதல் இடம். |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | D.கவின் |
| த/பெ | : | P.P.தண்டபாணி, |
| ஊர் | : | வெங்கமேடு, கரூர் |
| பள்ளி | : | சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வெண்ணை மலை கரூர். |
| மதிப்பெண் | : | 1187/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் இரண்டாம் இடம். |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | இ.சரண்யா |
| த/பெ | : | கு.இளங்கோவன் |
| ஊர் | : | கள்ளிப்பாளையம், கரூர் மாவட்டம். |
| பள்ளி | : | வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பண்செட்டி |
| மதிப்பெண் | : | 1187/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் இரண்டாம் இடம். |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.அநன்யா |
| த/பெ | : | P. சௌந்தராஜன் |
| ஊர் | : | முகப்பேர் மேற்கு, சென்னை |
| பள்ளி | : | வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முகப்பேர். |
| மதிப்பெண் | : | 1186/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் மூன்றாம் இடம். |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | B.அக்ஷரா |
| த/பெ | : | பாலசுப்பிரமணியம்.R |
| ஊர் | : | நெட்டை வேலாம்பாளையம், திருச்செங்கோடு வட்டம் |
| பள்ளி | : | கிரின் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் |
| மதிப்பெண் | : | 1186/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் மூன்றாம் இடம். |

### மாற்றுமொழியில் முதல் இடம்(SANSKRIT)

| | | |
|---|---|---|
| பெயர் | : | ந.விஷ்ணுப்பிரியா |
| த/பெ | : | வி.நடராஜ் |
| ஊர் | : | சூளை, ஈரோடு |
| பள்ளி | : | பாரதி வித்யாபவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திண்டல் |
| மதிப்பெண் | : | 1193/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் SANSKRIT -மொழியில் முதல் இடம். |

## மாற்றுமொழியில் முதல் இடம்( FRENCH )

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.நிரோஷினி |
| த/பெ | : | R.கிருஷ்ணமூர்த்தி |
| ஊர் | : | பொள்ளாச்சி, கோவை |
| பள்ளி | : | கிரின் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் |
| மதிப்பெண் | : | 1192 / 1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் FRENCH – மொழியில் முதல் இடம். |

## மாற்றுமொழியில் முதல் பாடம் (GERMAN)

| | | |
|---|---|---|
| பெயர் | : | கனகபார்த்திபன் இலக்கியா |
| த/பெ | : | K.பார்த்திபன் |
| ஊர் | : | நந்தம்பாக்கம். |
| பள்ளி | : | வித்யோதயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, T.நகர் |
| மதிப்பெண் | : | 1191/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் GERMAN மொழியில் முதல் இடம். |

## மாற்றுமொழியில் இரண்டாம் இடம்(SANSKRIT)

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.A.முகேஷ் |
| த/பெ | : | S. ஆசைத்தம்பி |
| ஊர் | : | சூளை, ஈரோடு |
| பள்ளி | : | பாரதி வித்யா பவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திண்டல் |
| மதிப்பெண் | : | 1190/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் SANSKRIT -மொழியில் இரண்டாம் இடம். |

## மாற்றுமொழியில் இரண்டாம் இடம்(FRENCH)

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.ப்ரீதா |
| த/பெ | : | இ.செல்வராஜ் |
| ஊர் | : | S.P.புதூர், நாமக்கல் |
| பள்ளி | : | கிரின் பார்க் மெட்ரிக் மகளிர் மேல்நிலைப்பள்ளி, போதுப்பட்டி. |
| மதிப்பெண் | : | 1187/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் FRENCH – மொழியில் இரண்டாம் இடம். |

## மாற்றுமொழியில் மூன்றாம் இடம்(SANSKRIT)

| | | |
|---|---|---|
| பெயர் | : | மு.மஞ்சரி |
| த/பெ | : | N.முருகேசன் |
| ஊர் | : | மேல் திண்டல், ஈரோடு மாவட்டம். |
| பள்ளி | : | பாரதி வித்யா பவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திண்டல் |
| மதிப்பெண் | : | 1182/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்குச் சமுதாயத்தில் SANSKRIT -மொழியில் மூன்றாம் இடம். |

**2014 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்துகொண்டு கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

13–07–2014 அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில்
கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | Ball Throw (Boys)<br>III & IV Std. | I ராகுல்.<br>II அமுது சுந்தரம்.<br>III ராகுல் கிஷோர். |
| 2 | Ball Throw (Boys)<br>V & VI Std. | I பி.பவித்ரன்<br>II மித்துன் சென்னியப்பன்<br>III தமிழரசன் |
| 3 | Ball Throw (Boys)<br>VII & VIII Std. | I ஜி.நித்தின்<br>II எம்.ரித்துன்<br>III எஸ்.சுந்தர் |
| 4 | Ball Throw (Boys)<br>IX & X Std. | I ப்ரேம்<br>II தமிழ்ச் செல்வன்<br>III பழனி |
| 5 | Shotput (Boys)<br>16 to 20 Years | I எஸ்.பிரேம் ஆனந்த்<br>II சி.கதிரவன்<br>III பி.கே.அபிநேஷ் |
| 6 | Shotput (Boys)<br>21 to 30 Years | I கே.சரவணன்<br>II எம்.பிரபு<br>III பி.திருநாவுக்கரசு |
| 7 | Shotput (Men)<br>31 to 40 Years | I சி.பொன்னுசாமி<br>II கே.எஸ்.ஜெகதீஷ்<br>III பாலாஜி |
| 8 | Shotput (Men)<br>41 to 50 Years | I ஆர்.எஸ்.மயில்வாகணன்.<br>II ஆர்.சிவசெல்வன்<br>III இசைபாலு |

| | | | |
|---|---|---|---|
| 9 | Shotput (Men)<br>51 to 60 Years | I<br>II<br>III | கே.ராஜாமணி<br>கே.சி.பழனிசாமி<br>ஆர்.சுந்தர் |
| 10 | Shotput (Men)<br>61 and above | I<br>II<br>III | வி.பழனியாண்டி<br>ஆர்.பூபதி<br>வி.ஸ்ரீரங்கன் |
| 11 | Running Race (Boys)<br>LKG & UKG 50 Metres. | I<br>II<br>III | அவிஷ்<br>கிருத்திக்<br>லிங்கேஷ் |
| 12 | Running Race<br>I & II Std. (Boys) 50 Metres | I<br>II | பவிஷ்<br>அனிஷ் |
| 13 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I<br>II<br>III | எஸ்.சுதன்<br>கே.ராகுல்<br>ராகுல்கிஷோர் |
| 14 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I<br>II<br>III | பி.பவித்ரன்<br>சி.டி.தமிழரசன்<br>டி.எம்.இளவரசன் |
| 15 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I<br>II<br>III | எஸ்.சுந்தர்<br>ஜி.நித்தின்<br>எம்.ரித்துன் |
| 16 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I<br>II | எஸ்.தமிழ் செல்வன்<br>பி.பிரேம் |
| 17 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I<br>II | எஸ்.பிரேம் ஆனந்த்<br>சி.கதிரவன் |
| 18 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I<br>II<br>III | பி.நித்தியானந்தன்<br>சி.பூபதி<br>எம்.பிரபு |

| | | | |
|---|---|---|---|
| 19 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I<br>II<br>III | எஸ்.பாலாஜி<br>சி.பொன்னுசாமி<br>ஜெ.ஜி.அருண்ராஜா |
| 20 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I<br>II<br>III | மணிகண்டன்<br>மயில்வாகனன்<br>பி.இளங்கோ |
| 21 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I<br>II<br>III | கே.சி.பழனிசாமி<br>பி.சதாசிவம்<br>எம்.எஸ்.சங்கமேஸ்வரன் |
| 22 | Ball Throw (Girls)<br>III & IV Std. | I<br>II<br>III | எ.எம்.நந்தனா<br>மிருதுவர்ஷனி<br>நேசிகா |
| 23 | Ball Throw (Girls)<br>V & VI Std. | I<br>II<br>III | எம்.பி.பிரிதிகா<br>எம்.ஸ்ருதி<br>திரிஷா |
| 24 | Ball Throw (Girls)<br>VII & VIII Std. | I<br>II<br>III | ஹவிதா<br>ஐஸ்வர்யா<br>சர்னிதா |
| 25 | Ball Throw (Girls)<br>IX & X Std. | I<br>II<br>III | ஆர்.நிமிதா<br>தீபிகா<br>தாரணி |
| 26 | Ball Throw (Girls)<br>16 to 20 years | I<br>II | பவித்ரா<br>மனிஷா |
| 27 | Ball Throw (Girls)<br>21 to 30 years | I<br>II<br>III | எஸ்.பத்மபிரியா<br>சங்கீதா<br>சசிகலா |
| 28 | Ball Throw (Women)<br>31 to 40 years | I<br>II<br>III | எஸ்.கீதா<br>கே.சங்கீதா<br>சத்யபிரியா |

| | | | |
|---|---|---|---|
| 29 | Ball Throw (Women) | I | சாவித்திரி சீனிவாசன் |
| | 41 to 50 years | II | கே.சரஸ்வதி |
| | | III | என்.ஜெயா |
| 30 | Ball Throw (Women) | I | ஜெயமணி |
| | 51 to 60 years | II | வசந்தமணி |
| | | III | கலைச்செல்வி |
| 31 | Ball Throw (Women) | I | நல்லம்மாள் |
| | 61 and above | II | மல்லிகா |
| | | III | சம்பூரணம் |
| 32 | Running Race (Girls) | I | ஜோஷிகா |
| | 50 Metres | II | எஸ்.காவ்யா |
| | LKG & UKG | III | ஜெ.மேஹா |
| 33 | Running Race (Girls) | I | மோனிகா |
| | 50 Metres | II | ஷ்ரேயா |
| | I & II Std | III | தானிகா |
| 34 | Running Race (Girls) | I | வர்ஷினி |
| | 50 Metres | II | சங்கவிதா |
| | III & IV Std | III | நஷிகா |
| 35 | Running Race (Girls) | I | எம்.அனுஷா |
| | 50 Metres | II | ஜீவசுமித்ரா |
| | V & VI Std | III | எம்.பி.பிரித்திகா |
| 36 | Running Race (Girls) | I | எம்.ஆர்.நிகிலா |
| | 75 Metres | II | இ.ஐஸ்வர்யா |
| | VII & VIII Std | III | பி.சர்னிதா |
| 37 | Running Race (Girls) | I | தீபிகா |
| | 100 Metres | II | எம்.பி.அமிர்தா |
| | XI & X Std | III | ஜெ.ஸ்வேதா |
| 38 | Running Race (Girls) | I | எ.பவித்ரா |
| | 100 Metres | II | டி.மனிஷா |
| | 16 & 20 years | | |

| | | | |
|---|---|---|---|
| 39 | Running Race (Women)<br>100 Metres<br>21 & 30 years | I<br>II<br>III | எஸ்.பத்மபிரியா<br>எஸ்.ரேவதி<br>எ.சுகன்யா |
| 40 | Running Race (Women)<br>100 Metres<br>31 & 40 years | I<br>II<br>III | சத்தியபிரியா<br>குணசுந்தரி<br>சுகந்தி |
| 41 | Running Race (Women)<br>100 Metres<br>41 to 50 years | I<br>II<br>III | சாவித்திரி சீனிவாசன்<br>சுமதி கிருஷ்ணன்<br>சரஸ்வதி கிருஷ்ணசாமி |
| 42 | Running Race (Women)<br>100 Metres<br>51 to 60 years | I<br>II<br>III | ஜெயமணி<br>பி.பழனியம்மாள்<br>கலைச்செல்வி |
| 43 | Running Race (Women)<br>100 Metres<br>61 & Above | I<br>II<br>III | நல்லம்மாள்<br>நீலா அண்ணாமலை<br>சம்பூரணம் |
| 44 | Couples Ball Catching | I<br>I<br>II | சுப்பிரமணி , சுமதி<br>செந்தில்குமார் , கீதா<br>அர்ஜுன் ராஜா, திலகம் |
| 45 | Lucky Corner ( Women ) | I<br>II<br>III | ஜெயமணி<br>தங்கமணி<br>மகேஸ்வரி |

## கயிறு இழுக்கும் போட்டி

| **WINNER**<br>(Team - B)<br>முதலிடம் | | **RUNNER**<br>(Team - C)<br>இரண்டாமிடம் | |
|---|---|---|---|
| 1. | கே.சி.பழனிச்சாமி | 1. | ராஜ்குமார் |
| 2. | வி.என்.கிருஷ்ணசாமி | 2. | ஜெ.ஜி.அருண்ராஜா |
| 3. | சிவசாமி | 3. | டி.கே.தேவராஜ் |
| 4. | சி.பொன்னுசாமி | 4. | பி.எம்.பாண்டியன் |
| 5. | பி.பரமேஷ்வரன் | 5. | பி.இளங்கோ |
| 6. | வி.செந்தில்குமார் | 6. | துரைசாமி |
| 7. | கே.சரவணன் | 7. | பாலாஜி |
| 8. | கார்த்திக் | 8. | வி.ஸ்ரீரங்கன் |
| 9. | சதாசிவம் | 9. | லெனின்குமார் |
| 10. | அபினேஷ் | 10. | கே.அருணகிரி |
| 11. | லோகநாதன் | 11. | கே.கார்மேகம் |
| 12. | என்.தனபால் | 12. | கே.பிரகாஷ் |
| 13. | வி.வடிவேல் | 13. | சந்துரு |
| 14. | என்.சுப்பிரமணி | 14. | ஆனந்த்குமார் |
| 15. | டி.விவேக் | 15. | பிரேம்குமார் |
| 16. | செந்தில் | 16. | எஸ்.அன்பழகன் |
| 17. | பிரபு | 17. | லெனின் |

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**29–06–2014** அன்று வெள்ளி விழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | | **நடனப்போட்டி** |
| 1. | LKG to V Std வரை | 1 எஸ்.சங்கவிதா |
| | | 2 ஆர்.கார்த்திகா |
| | | 3 பி.மோனிகா |
| | | 3 பி.ஸ்ரீரஞ்சனி |
| | | 3 பி.சிவானி |
| | VI to XII Std வரை | 1 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 2 எம்.லத்திகா |
| | | 3 ஆர்.நிமிதா |
| | | 3 ஆர்.மனுமிதா |
| | | **பாட்டுப்போட்டி** |
| 2. | LKG to V Std வரை | 1 எஸ்.அமுதுசுந்தரம் |
| | | 2 ஏ.எம்.நந்தனா |
| | | 3 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 3 ஆர்.கார்த்திகா |
| | VI to XII Std வரை | 1 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 2 எம்.லத்திகா |
| | | 3 எம்.பி.பிரித்திகா |
| | | 3 ஆர்.நிமிதா |
| | | **பேச்சுப்போட்டி** |
| 3. | | 1 எஸ்.ஈ.லிங்கேஷ் |
| | | 2 ஆர்.நிமிதா |
| | | 3 ஜி.ஏ.நச்ஷத்திரா |
| | | 3 பி.ஸ்ரீரஞ்சனி |
| | | **கட்டுரைப்போட்டி** |
| 4. | பள்ளி அளவிலான போட்டி | 1 ஏ.பவித்ரா |
| | | 2 டி.தீபிகா |
| | | 3 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 3 எம்.பி.அமிர்தசுருதி |

| | | |
|---|---|---|
| | கல்லூரி அளவிலான போட்டி | 1 எஸ்.சிவரஞ்சனி |

**கவிதைப் போட்டி**

| | | |
|---|---|---|
| 5. | பள்ளி அளவிலான போட்டி | 1 டி.லோகப்பிரியங்கா |
| | | 2 ஏ.எம்.நந்தனா |
| | | 3 கே.பி.ஸ்ரீராம் |
| | | 3 எம்.லத்திகா |
| | | 3 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 3 எம்.பி.பிரித்திகா |
| | | 3 டி.தீபிகா |
| | | 3 எம்.ஹர்ஷிகா |
| | | 3 ஆர்.அன்வித்ரிஷி |
| | | 3 பி.ஸ்ரீரஞ்சனி |
| | | 3 ஏ.பவித்ரா |
| | | 3 எஸ்.சிவராகவ் |
| | கல்லூரி அளவிலான போட்டி | 1 கே.எஸ்.சுபாபிரசாந்த் |
| | | 2 எஸ்.சிவரஞ்சனி |

**ஓவியப்போட்டி**

| | | |
|---|---|---|
| 6. | LKG to V Std வரை | 1 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 2 பொவிஷாநியந்திரி |
| | | 3 கே.பி.கங்கேஷ் |
| | | 3 எஸ்.பி.விஜயராஜகோபாலன் |
| | | 3 ஆர்.கார்த்திகா |
| | | 3 எஸ்.சக்திவேல் |
| | | 3 எல்.ஹரிணி |
| | | 3 ஆர்.அனுர்த்துன் |
| | | 3 கே.என்.ப்ரனௌவ் ரஞ்ஜன் |
| | | 3 எம்.ஹர்ஷிகா |
| | | 3 டி.சாதனா |
| | | 3 எஸ்.ஈ.லிங்கேஷ் |
| | | 3 கே.என்.ப்ரனவி |
| | | 3 பி.ஸ்ரீரஞ்சனி |
| | | 3 எஸ்.சங்கவிதா |
| | | 3 எஸ்.டி.கிருத்திக் |

3 பி.மோனிகா
3 ஏ.எம்.நந்தனா
3 எஸ்.அமுதுசுந்தரம்
3 ஜி.ஏ.அக்சரா
3 பி.ராகுல்கிஷோர்
3 எம்.ரக்சன்யா ஸ்ரீதனுர்
3 டி.பிரித்திகா லக்ஷ்மி
3 டி.தனிஷா
3 எஸ்.வர்ஷா
3 எஸ்.காவியா
3 பி.சிவானி

VI to XII Std வரை

1 எம்.லத்திகா
2 ஆர்.மனுமிதா
3 ஆர்.எஸ்.விக்னேஷ்
3 ஆர்.நிமிதா
3 கே.பிரியதர்ஷணி
3 டி.எம்.இளவரசன்
3 எம்.பி.அமிர்தசுருதி
3 எம்.பி.பிரித்திகா
3 டி.லோகப்பிரியங்கா

---

**மாறுவேடப்போட்டி**

7.

1 கே.பி.கங்கேஷ்
2 எம்.பி.அமிர்தசுருதி
3 த்ரிஷா
3 எஸ்.சங்கவிதா

---

**கோலப் போட்டி**

8

1 துளசி சுப்பிரமணியம்
2 மனோரஞ்சிதம் பிரபுராஜா
3 சித்ரா ரவிக்குமார்
3 திலகம் அருண்ராஜா

## வினாடி – வினா போட்டி

9. காலிங்கராயன் அணி (முதல் பரிசு)

1. ஆர்.நிமிதா
2. எம்.பி.பிரித்திகா
3. த்ரிஷா
4. டி.எம்.இளவரசன்
5. ஜி.ஏ.நக்ஷத்திரா

கோவை செழியன் அணி (இரண்டாம் பரிசு)

1. பி.ராகுல்கிஷோர்
2. எம்.லத்திகா
3. எம்.பி.அமிர்தசுருதி
4. ஆர்.கார்த்திகா
5. எஸ்.அமுதுசுந்தரம்